விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

# சுதந்திரன்
# THE "SUTANTIRAN."
TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.
இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

முதற் பதிப்பு
பக்கங்கள் 4

"சுதந்திரன்"
( தினப் பதிப்பு )
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா ,, 12-00
1 வருடச் சந்தா ,, 24-00
மானேஜர்
"சுதந்திரன்"
194A, தட்டாரத் தெரு, கொழும்பு.
Phone: 3411
நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ௵ மார்கழி ௴ 4௳ வெள்ளிக்கிழமை — Colombo, December, 19 1947 — ஹிஜ்ரி 1367 ஸபர் பிறை 6 | இதழ் 198

# "ஊர்காவற்றுறை நீர்க்கடவையை அபிவிருத்தி செய்க"

## முல்லைத் தீவுக்கு கச்சேரி தேவை

—திரு குமாரசாமி

## போலி சுதந்திரத்தைக் கொண்டாட 8 லட்சம ரூபாய் செலவா?

—திரு கே. கனகரத்தினம்

## குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டும்

—திரு தஹநாயக்கா

## உள்நாட்டு மந்திரி செலவினத்தின் மீது பிரதிநிதிகளின் கண்டனம்

கொழும்பு, டிச. 18

**பாராளுமன்றம் நேற்று பிற்பகல் சபாநாயகர் தலைமையில் கூடியபோது உள்நாட்டுமந்திரியின் செலவினத்தின்மீது பலத்த விவாதம் நடைபெற்றது. ஊர்காவற்றுறை நீர்க்கடவை படகுப்போக்குவரத்துபற்றி திரு வன்னியசிங்கம் கொண்டுவந்த திருத்தப் பிரேரணைமீது திரு தம்பியையா பேசுகையில் ஊர்காவற்றுறை நீர்க்கடவைப்படகுப் போக்குவரத்து அபிவிருத்திசெய்யப்படவேண்டுமென்று கூறினார்.**

**சுதந்திர தினத்தைக்கொண்டாட முதலில் ஒதுக்கப்பட்ட மான்யம் ஐந்து லட்சத்துடன் மேலும் மூன்று லட்சம் கூட்டப்பட நிதி மந்திரி பிரேரணை கொண்டுவந்தார். இதனைக் கண்டித்து பலர் பேசினர். திரு கனகரத்தினம் இது பெரும் தமாஷாக இருப்பதாகக் கூறி வெகுவாக ஆட்சேபித்தார்**

**முல்லைத்தீவு மக்களின் கஷ்டங்களை நிவர்த்திக்க அங்கு ஒரு கச்சேரி வேண்டுமென்று திரு குமாரசாமி வற்புறுத்தினார் இங்கு கச்சேரி அவசியமில்லையென்று திரு சுந்தரலிங்கம் கூறினார். குதிரைப்பந்தயம் ஒழிக்கப்படவேண்டுமென பல பிரதிநிதிகளும் கூறினார்கள்.**

பாராளுமன்றம் நேற்று பிற்பகல் 1 மணிக்கு சபா நாயகர் திரு. ஏ. எப். மொலமூரே தலைமையில் கூடியது. பல கேள்விகளுக்குப் பதில்கள் அளிக்கப்பட்டன.

வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட வேண்டிய மாற்றங்களடங்கிய ஜாபிதாவொன்றை நிதி மந்திரி சபையில் சமர்ப்பித்தார். இதன் பின் வரவுசெலவுத் திட்டம் கமிட்டி முறைப்படி பரிசீலனை செய்யப்படுவது தொடர்ந்து எடுக்கப்பட்டது.

உள்நாட்டு மந்திரி இலாகா மான்யம் (பகுதி 50) ரூபா 184,381 சம்பந்தமான திருத்தப் பிரேரணைகள் எடுக்கப்பட்டன.

### குதிரைப் பந்தயத்தை ஒழியுங்கள்

உள்நாட்டு மந்திரியும் கிராம அபிவிருத்தியும் என்னும் குறிப்பின் கீழ் உள்ள செலவுக்கு ஒதுக்கப்பட்ட மான்யத்தில் ரூ. 10 குறைக்க வேண்டுமென திரு தஹநாயகா கொண்டுவந்த திருத்தப்பிரேரணை பற்றி அவர் பேசுகையில் கூறியதாவது:-

இந்நாட்டிலே இருக்கும் குதிரைப் பந்தயம் அடியோடு விரைவில் ஒழிக்கப்படவேண்டும். இது எவ்வளவு கூடாதென்பதை உள்நாட்டு மந்திரியே அறிவார். இலங்கைக்கு வெளியே நடக்கும் குதிரைப் பந்தயங்கள் மீது பந்தயங்கள் பிடிக்கப்படுவதை ஒழிப்பது கஷ்டந்தான்.

குதிரைப்பந்தய முடிவுகளை அச்சடித்து வெளியிடப்படுவதையும் தடைசெய்ய வேண்டும். சில விஷயங்களின் சார்பில் நடத்தப்படும் களியாட்ட விழாக்களில் சூதாட்டங்கள் நடக்கப்படுவது ஒழிக்கப்பட வேண்டும். பந்தயக் கடைகள் லைசென்ஸ் பெற வேண்டும்.

### சமூக கிளப்புகள் ஒழிக்கப் படவேண்டும்

திரு பீட்டர் கெனமன் பேசுகையில் கூறியதாவது:- "சமூக கிளப்புகள்" மற்றொரு பெரிய தொல்லையைக் கொடுக்கும் விஷயமாகும். இவற்றை அடியோடு ஒழிக்கவேண்டும். பொதுத் தேர்தல் காலத்தில் இந்த கிளப்புகள், தேர்தலில் ஆள் மாருட்டமாக வாக்களிப்போரின் மத்திய இடங்களாக இருந்துள்ளன. இவற்றை ஒழிக்க வேண்டும்.

திரு எம். எஸ். காரியப்பர்:- "இவ்விஷயம்பற்றி ஆலோசனை நடைபெறுகிறது."

டாக்டர் என். எம். பெரேரா:-இக் கேள்வி பற்றி திட்டமான ஒரு கொள்கை இருக்க வேண்டும். எல்லாக் கலகங்களுக்கும் மூலகாரணம் குதிரைப் பந்தயமே. அரசாங்கம் தான் செய்யப் போவதை அவசியம் கூறியே ஆகவேண்டும்.

திரு. டி. எஸ். சேனநாயகா:- இந்த விஷயம் பற்றி ஆலோசிக்கப்படுகிறது. மற்ற நாடுகளின் நடவடிக்கைகளுடன் சமமாக இங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு ஸ்ரீநிஸங்கா:- சென்னை மாகாணத்தில் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட்டு விட்டது. பம்பாய் மாகாணம் இதனை ஒழிப்பது பற்றி ஆலோசித்து வருகிறது.

திரு தஹநாயகாவின் திருத்த பிரேரணை தோல்வியுற்றது.

உள் நாட்டு மந்திரியின் நிரந்தரக் காரியதரிசியின் சம்பளத்தில் இருந்து ரூ. 6000 குறைக்கப்பட வேண்டுமென டாக்டர் என். எம். பெரேரா ஒரு திருத்தப் பிரேரணை கொண்டு வந்தார்.

திரு தஹநாயகா:-உள்நாட்டு மந்திரிக்கு பல காரியதரிசிகளும் பல உதவி காரியதரிசிகளும் இருக்கின்றனர் மந்திரியின் நிரந்தரக் காரியதரிசிக்கு ரூ. 30,000 சம்பளம் கொடுக்கப்படுகிறது.

திரு காரியப்பர்: -உள்நாட்டு மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி :- உள்நாட்டு மந்திரி பல புதிய வேலைகளைக் கவனிக்க வேண்டியிருப்பதால் அதிக அதிகாரிகளை வேண்டியவராக இருக்கிறார்.

திரு தஹநாயகா:- பல காரியதரிசிகளை வைத்திருக்கும் இம் மந்திரிக்கு அந்தரங்க காரியதரிசி தேவையில்லை.

திரு டி எஸ். சேனநாயகா:- பொது அரசாங்க சேவைக்கு நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்களை பொது சேவைக் கமிஷன்தான் நியமித்தது.

திரு காரியப்பர் :- இலங்கையில் 9 மாகாணங்களை நிர்வகிக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள கச்சேரிகள் தனித்தனி இலாகாக்கள் போன்றவை. இவற்றுடன் அவசரகால தற்காலிக அரசாங்க மாகாண அதிகாரிகளின் வேலைகள் கவனிக்கப்பட வேண்டும். இவை காரணமாகவே பலகாரியதரிசிகளை இந்த இலாகாவுக்கு நியமிக்க வேண்டி ஏற்பட்டது

டாக்டர் பெரேராவின் திருத்தப் பிரேரணை தோல்வியுற்றது இவருடைய மற்றும் இரு திருத்தப் பிரேரணைகள் கைவிடப்பட்டன.

### கொண்டாட்டத்துக்கு மான்யம்

உள்நாட்டு மந்திரியின் இலாகாவுக்கு பொதுக் கொண்டாட்ட செலவு மான்யம் ரூ 500,000 துடன் ரூ. 300,000 மேலும் சேர்க்கப்பட வேண்டுமென்னும் திருத்தப் பிரேரணையை நிதி மந்திரி கொண்டு வந்து பேசுகையில் சுதந்திர தினத்தன்று நடக்கப் போகும் செலவுகள் சம்பந்தமாகவும் வெளிநாட்டு அரசாங்க தலைவர்களை அத்தினத்தில் அழைப்பதால் ஏற்படும் செலவுகள் சம்பந்தமாகவும் இத்தொகை கூட்டப்பட வேண்டுமென்று கூறினார்.

டாக்டர் பெரேரா:-குதூகலத்துக்குச் செலவிட வரி கொடுப்பவர் ரூ. 800,000 கொடுக்க வேண்டுமா?

திரு டி. எஸ். சேனநாயகா:- சுதந்திர தினத்தன்று பாராளுமன்ற திறப்புவிழா மிக விமரிசையாக நடத்தப்படும்.

திரு பீட்டர் கெனமன்:- நூற்றுக்கணக்கான மக்கள்பட்டினி கிடக்கும்போது எட்டு லட்சம் ரூபாய் தமாஷாக செலவிடப்படும்.

### கிளாஸ்டர் கோமகன்

திரு தஹநாயகா:-இங்கு சுமார் 500,000 திடகாத்திரமுள்ளவர்கள் கவனிக்கப்படாதிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைகளும் கிடையாது. ஆனால் சந்தோஷமாக பொழுது போக்குவதற்கு ரூ 800,000 செலவிடப்பட இருக்கிறது. பிரிட்டனில் உள்ள அதிகாரிகள். இலங்கை டொமினியன் அந்தஸ்துக்கு கிட்டிய அந்தஸது பெறுகிறதென்று கூறியுள்ளனர்.

இப்படியிருக்கும் போது சுதந்திரத்தை உண்மையில் பெறாத அரசாங்கம் இதனை சுதந்திரமென்று எவ்விதம் கொண்டாட முடியும்? பாராளுமன்றம் சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்கு இறக்கப்படும் போது கிளாஸ்டர் கோமகன் இலங்கை வருவதாக நான் அறிகிறேன் இலங்கை மக்கள் அவரை வரவேற்க மாட்டார்கள் என் எனக்குத் தெரியும்.

திரு ஜெ. ஆர். ஜெயவர்தனா:- எதிர்க் கட்சியினரும் இந்தக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வரென நான் எதிர்பார்க்கிறேன். 135 வருடங்களாக அடிமை மக்களாக இருந்ததால் இத்தினத்தைக் கொண்டாட அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இலங்கை தனக்கு யார் அரசராக இருக்கலாமென்று பிரிட்டனுக்குக் கூறும் உரிமையுடையதாக இருக்கிறது கிளாஸ்டர் கோமகன் வருவார்.

திரு கே. கனகரத்தினம்:- இது இச்சபையிலே எக்காலத்திலும் காணப்படாத மிகப் பெரிய தமாஷாகும். இத்தினத்தைக் கொண்டாட நேற்று ரூ 500,000 நிறைவேற்றப்பட்டது. இன்று ரூ 300,000 மேலும் வேண்டுமென்று கேட்கப்படுகிறது இலங்கையின் மக்கள் பட்டினி கிடக்கின்றனர். பொதுமக்கள் பணத்தை வீண் விரயம் செய்யவே இம்முயற்சியாகும்.

திரு எச். ஸ்ரீநிஸங்காவும் இதனை ஆட்சேபித்துப் பேசினார். இந்த மான்ய அதிகரிப்பு பிரேரணை சபையில் நிறைவேறியது. டாக்டர் பெரேராவின் மற்ற திருத்தப் பிரேரணைகள் எடுக்கப்படவில்லை.

மாகாண நிர்வாக செலவு (பகுதி 51) மான்யம்பற்றி விவாதம் நடந்தது. இதற்கு ரூ. 11,106,863 ஒதுக்கப்பட்டுள்ளது. திரு தஹநாயக்கா மேல் மாகாண முதலியார் சம்பளத்தில் ரூ. 3600 குறைக்கப்பட வேண்டுமெனக் கொண்டுவந்த திருத்தப் பிரேரணைபற்றி பேசுகையில் அரசாங்க சபையில் 7 வருடங்களுக்கு முன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முற்றாக அமுல் நடத்தப்படவில்லையென்று கூறினார்.

திரு டி. எஸ். சேனநாயக்கா பேசுகையில் எல்லாம் சடுதியில் மாற்றப்படமாட்டாதென்றும் படிப்படியாகவே மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்றும் கூறினார்.

சில அங்கத்தினரின் பொறாமை காரணமாகவே முதலியார் ரட்டை மகாத்மியா முதலியோர் பதவிகளை ரத்துச்செய்ய அரசாங்க சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதென்று திரு ரம்புக்போதா தெரிவித்தார். இப்பொழுதுள்ள மணியக்காரர்களிலும் பார்க்க முன்னிருந்தவர்கள்தான் சிறந்தவர்கள் என்று திரு எச். கீர்த்திரத்ன தெரிவித்தார்.

திரு காரியப்பர்: 110 பிரதம தலைமைக்காரர்களில் 90 பேர்கள் விலக்கப்பட்டுவிட்டனர். மிகுதியான பதவிக்கு அடுத்த "டி. ஆர். ஓ." பரீட்சையில் இத்தலைமையதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்.

திருத்தப் பிரேரணை தோல்வியுற்றது. திரு. வி. டி. எவ். குணவர்தனவின் திருத்தப் பிரேரணையும் திரு எம். எச். பீரிஸின் திருத்தப் பிரேரணையும திரும்ப அவர்களால் எடுக்கப்பட்டன. டாக்டர் என். எம். பெரேரா கண்டி மாகாணப் பகுதி சம்பந்தமாக கொண்டு வந்த திருத்தப் பிரேரணைகளும் திரும்ப அவர்களால் எடுக்கப்பட்டன. திரு வீ. குமாரசாமி பேசுகையில் பிரதம தலைமைக்

(4-ம் பக்கம் பார்க்க)

## போலிஸ் சார்ஜண்ட் - கான்ஸ்டபிள்கள் சங்கத் தடை ரத்தாகாது

## பூநகரிக்கு ஒரு குடியேற்றத் திட்டம்

### இரணைமடுக்குளம் திருத்தம் செய்யப்படவேண்டும்

### தீர்மானங்களுக்கு ஸ்ரீ குமாரசாமி முன்னறிக்கை

கொழும்பு, டிச. 18

திரு வி. குமாரசாமி கீழ்க்கண்ட தீர்மானங்களை பாராளுமன்றத்தில் கொண்டு வருவதற்கு முன்னறிக்கை கொடுத்துள்ளார்.

"பூநகரி டிஸ்திரிக்கில் இன்று கைவிடப்பட்டுக் கிடக்கும் பெரிய குளங்களில்ஒன்றை மத்தியாகக் கொண்டு ஒரு குடியேற்றத் திட்டத்தை தயாரித்து அதனை அமுல் நடத்த வேண்டுமென சபை கருதுகின்றது."

"கராச்சி விவசாயிகளின் நலன்களுக்காகவும் சிறு போகத்தின் போது அதிக காணிகளை விவசாயத்துக் குட்படுத்தவும் பெரிய கிருஷிகப் பகுதிகளுக்கு இப் பலாபலன்கள் கிடைக்கவும் இரணைமடுக் குளத்தின் அணைகளைக் கட்டியோ அன்றி வேறு வகைகளாலோ அதிக ஜலம் அக்குளத்தில் தங்கும்படி செய்ய உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்."

"யாழ்ப்பாணக் குடா நாட்டில் காணிப் பஞ்சம் காரணமாகவும் இந்த டிஸ்திரிக்கின் நெல்லு தட்டுப்பாடு காரணமாகவும் பூநகரி துணுக்காய் டிஸ்திரிக்குகளிலுள்ள கிராமக் குளங்களை யெல்லாம் திருத்தியமைத்து குடியேற்றத் திட்டங்களை அமுல் நடத்தி யாழ்ப்பாண விவசாயிகளுக்குக் காணி வழங்கப்பட நிபுணர்களடங்கிய ஒரு கமிட்டி நியமிக்கவேண்டுமென இச் சபை கருதுகின்றது."

## யூ. என். பி, அரசாங்கத்தின் விவசாயக் கொள்கை

### விவசாய மந்திரியின் செலவு மீது திரு குமாரசாமியின் வெட்டுப் பிரேரணை

கொழும்பு, டிச. 18

இன்று நடக்கும்பாராளுமன்றத்தில் திரு வி. குமாரசாமி, விவசாய மந்திரியின் சொந்த செலவுக்கு ஒதுக்கப்பட்ட மான்யத்தில் ரூ. 100 குறைக்கப்பட வேண்டுமென்னும் திருத்தப் பிரேரணையைக் கொண்டுவருவார்.

இந்தப் பகுதிக்கு ரூ. 138,351 மான்யமளிக்கப் பட்டுள்ளது விவசாய கொள்கைகள் பற்றி இங்கு பேசப்படும் என்று தெரிகிறது.

## எலிசபெத் இளவரசி கலியாண விருந்து

லண்டன், டிச. 16

புதமண உல்லாசப் பயணம் சென்று திரும்பிவந்த எலிசபெத் இளவரசியும் எடின்பரோ கோமகனும் இன்று பக்கிங்ஹாம் அரண்மனையில் ஒரு கலியாண விருந்தளித்தனர் 300 பேர்கள் விருந்துக்கு விஜயம் செய்திருந்தார்கள்.

## ஆசிரியர்களின் சம்பளப் பாக்கிகள் கொடுக்கப்படுவதில் தாமதமேன்?

## பாராளுமன்றத்தில் கேள்விகள்

கொழும்பு, டிச. 18

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் தலைமையில் கூடியபோது கல்வி மந்திரியிடம் திரு ஸி. குணவர்தன கீழ்க்கண்ட கேள்வியைக் கேட்டார்:-

சம்பள நிர்ணயக் கமிட்டி அரசாங்க அறிக்கையாக வெளியிட்ட சம்பள சிபார்சுகளின்படி 1946 ஜனுவரி 1-ம் தேதி முதல் ஆசிரியர்களுக்கு சம்பளப் பாக்கிகள் வழங்கவேண்டும் இப்பொழுது அதன்படி அநேக அரசாங்கப் பாடசாலைகளினதும் உதவி பெறும் பாடசாலைகளினதும் ஆசிரியர்களுக்கு இந்த சம்பளப் பாக்கிகள் செலுத்தப்படவில்லையென்பது கல்வி மந்திரிக்குத் தெரியுமா?

மற்றும் அரசாங்க இலாகாக்களிலும்பார்க்க அதிகமான கணக்கு அதிகாரிகளை இந்த இலாகா உடையதாக இருந்தும் இத்தாமதம் ஏன்?

கல்வி மந்திரி இதற்கு அளித்த பதில் வருமாறு:-

இந்த உண்மைகளை நான் அறிந்தே இருக்கிறேன். கல்வி இலாகா சம்பந்தப்பட்ட வரையில் இப்பாக்கிகளை செலுத்துவதில் தாமதம் இல்லையென்பதில் திருப்தியடைகிறேன். வேலையில் உள்ள சிக்கல்களும் பெரும் அளவில் இவற்றை முடிவு செய்யவேண்டியதும் தான் இத்தாமதத்துக்குக் காரணம்.

இந்த சம்பள மாற்றத்தினால் 15,000 அரசாங்க ஆசிரியர்களும் 11,500 உதவி பெறும் சுதேச பாஷை-துவிபாஷா ஆசிரியர்களும் 8000 உதவி பெறும் ஆங்கில பாடசாலை ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பள நிர்ணயக் கமிட்டியின் அறிக்கையில் இந்த சம்பள மாற்றத்தின் பெருவேலைகள்பற்றி அக் கமிட்டியினரே குறிப்பிட்டுள்ளனர். இந்த சம்பளப் பாக்கிகளை செலுத்துவதில் தாமதம் ஏற்படுவதைத் தடுக்கவேண்டி கடந்த அக்டோபரில், சம்பளப் பாக்கிகளைக் குறிப்பிட்டு தெரிவிக்கும் ஆசிரியர்களுக்கு சம்பளப் பாக்கிகளைக் கொடுக்கும்படியும் அவ்விதம் குறிப்பிடும் ஆசிரியர்கள் பிழையாக கணக்கிட்டிருப்பின் அவர்கள் மேலதிகமாகப் பெறும் தொகையைத் திரும்ப செலுத்தவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது.

திரு ஸி. குணவர்தன:- இந்த சம்பளப் பாக்கிகள் முற்றாக செலுத்தி முடிய எவ்வளவு காலம் எடுக்குமென்பதைக் குறிப்பாகத் தெரிவிக்க முடியுமா?

திரு ஈ. ஏ. நுகவெல (மந்திரி):-1948 மார்ச்சு மாதம் முடியுமுன் செலுத்தப்பட்டு முடியும்.

டாக்டர் பெரேரா:-இது மிகவும் நீண்டகாலமாகும்.

அடுத்தபடியாக திரு பீட்டர் கெனமன் உள்நாட்டு மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியிடம் கேட்ட கேள்வி:-

[அ] பொது அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கத்தின்

(4-ம் பக்கம் பார்க்க)

நாஷனல் லொசிஞ்சர் பிஸ்கெற்

நல்ல அனுபவம் வாய்ந்தவர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப் பெற்ற லொசிஞ்சர்களும், பிஸ்கெற்றுகளும் பாலர் முதல் வயோதிபர் வரை விரும்புவது எங்கள் நாஷனல் லொசிஞ்சர்களும், பிஸ்கெற்களுமே.

மொத்தமாகவும், சில்லறையாகவும் குறைந்த விலைக்கு எங்கும் கிடைக்கும்.

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்!

நாஷனல் கொன்பெக்ஷனரி கம்பெனி,
489, பெலிய கொட, களனியா.
டெலிபோன்: களனியா 35.

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 எ, தட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து௵ மார்கழி மீ 4உ
வெள்ளிக்கிழமை

# ஏமாற்றுப் பலிக்காது !

பட்டுக் குடை பார்ப்பதற்கு வெகு அழகாக இருக்கும். ஆனல் அதை மழைக்குப் பிடிக்கமுடியாது. அதுபோன்று யாழ்ப்பாணத்தில் சில தான்தோன்றித் தலைவர்கள் வெகு அழகாக மேடைகளில் பேசுவார்கள். அப்பேச்சுக்கள் அநுபவத்தில் உதவாதவையாகவே இருக்கும். இந்த வர்க்கத்தின் பிரகஸ்பதியாக விளங்குபவர் யாழ்ப்பாண நகரசபைத் தலைவர் திரு ஸி. பொன்னம்பலம்.

அவருக்கு மேடைகளில் பேசுவதென்றால் தீராத ஆசை. இத்தீராத ஆவலைப் பூர்த்திசெய்து கொள்ளுவதற்காக எதுவும் பேசுவார். அப்படிப் பேசும் உதவா விஷயங்களைப் பத்திரிகைகளில் வெளிவரும்படியும் செய்துவிடுவார். இந்த வகைப் பேச்சுக்களில் ஒன்று நேற்று முன்தினம் ஒரு ஆங்கிலத் தினசரியில் வெளிவந்துள்ளது. சென்ற பாராளுமன்றத் தேர்தல் யாழ்ப்பாணத்தவருக்குப் புத்தி மழுங்கிவிட்டதென்பதை நிரூபிக்கின்றது என்று திரு. பொன்னம்பலம் அதில் கூறியிருக்கிறர்.

அப்புதினச் செய்தி உண்மையாக இருந்தால் யாழ்ப்பாணத்தவர்கள் யாவரும் புத்தியை அடைவு வைத்துவிட்டார்கள் என்றுதான் நாம் அர்த்தம் கொடுக்கவேண்டும். ஆகவே நகரசபைத் தலைவராகிய அவர் ஒருவருக்குத்தான் புத்தி இருக்கின்றதா? அதைச் சிறிது ஆராய்வோம்.

திரு. பொன்னம்பலம் ஒரு முறையல்ல, பலமுறைகளில சிங்கள வகுப்புவாத மந்திரிகள் யாழ்ப்பாணத்தைக் கவனிக்கிறர்களில்லை என்று பழி சுமத்தி வந்தவர். இக்கூற்றை அவர் சோல்பரிக் கமிஷனர்களுக்கு யாழ்ப்பாணத்தில் விருந்து கொடுத்தபொழுது பகிரங்கமாகக் கூறினர். பின்பு ஒருகால் காலஞ்சென்ற பகிரங்க வேலைப் பகுதித் தலைவராகிய திரு. எஸ். மகாதேவாவுக்கு யாழ்ப்பாண மக்கள் வரவேற்பளித்தபோதும், போக்குவரத்து மந்திரி கேர்னல் கொத்தலாவலைக்கு இதை இடித்துக் கூறினர். இவற்றைவிட மந்திரிகளுக்கு, நகரசபைத் தலைவர் என்ற முறையில் எழுதும் ஒவ்வொரு மகஜரிலும் இதைச் சுட்டிக்காட்டி வந்தார்.

பொதுத் தேர்தல் வந்தது திரு. பொன்னம்பலத்திற்கு மனமாற்றமும் தடுமாற்றமும் ஏற்பட்டது. இதற்குக் காரணம் பலவுண்டு யாழ்ப்பாணப் பிரதிநிதியாக இருக்க அவருக்கு விருப்பமிருந்தது ஆனல் மக்களிடையே போதிய ஆதரவில்லை. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துடன் சேர்ந்திருக்கலாமே? தமக்கே முதலிடம் தேடும் நகரசபைத் தலைவர் இந்தப் பாதையை உபயோகிக்கச் சம்மதிக்கவில்லை. ஆகவே திரு. மகாதேவாவுடன் சேர்ந்தார். திரு. மகாதேவா, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகிய திரு. சேனநாயக்காவால் யாழ்ப்பாணப் பகுதிக்கு அபேட்சகராக நியமிக்கப்பட்டவர். தமிழ் மக்கள், தமிழ் மக்களின் ஸ்தாபனத்தால் நியமிக்கப்பெற்ற திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை விரும்புவது முறைமைதானே! சிங்கள வகுப்புவாதியின் கைப்பொம்மையாகிய திரு. மகாதேவாவை அரசியலிலிருந்தும் ஒழிப்பதும் கடமைதானே!

இருள் அகன்றது. ஆனல் நகரசபைத்தலைவருக்கு இது பிடிக்கவில்லை. தாம் ஆதரித்த கட்சி வெற்றி பெறவில்லையென்பது அவருக்குக் கவலையைக் கொடுத்துள்ளது. தமிழன் என்ற முறையில் முன்பு உண்மையை விளங்க வைத்துப்பின்பு சுயநல வேட்கையால் உந்தப்பட்டுசிங்கள வகுப்பு வாதிகளுடன் சேர்ந்தவரை எவர்தான் ஆதரிப்பர்? ஆகவே தாம் எண்ணியஎண்ணம நிறைவேறாததும் நகரசபைத் தலைவர் மக்களைப் புத்தியற்று விட்டார்கள் எனக் கூற முற்பட்டிருக்கிறர்.

ஒரு முதலை ஒரு குரங்கை தனக்கு உணவாக்க விரும்பி தான் வசிக்கும் ஆற்றின் அதிசயத்தைக் காட்ட முதுகில் ஏற்றிச் சென்றதாம். சிறிது தூரம் ஆற்றில் பிரயாணம் செய்ததும் முதலையின் உண்மை எண்ணத்தை குரங்கு விளங்கிக்கொண்டது. உடனே குரங்கு "அண்ணு! எனது ஈரலை மரத்தில் வைத்துவிட்டு வந்துள்ளேன்; அதை எடுத்துக் கொண்டு வர உதவி செய்" என்று கூறியது. முதலை குரங்கின் ஈரலையே கருதியிருந்ததால் குரங்கைக் கரைக்குக் கொண்டு வந்தது. கரை சேர்ந்ததும் குரங்கு "அண்ணு! ஏமாற்றுவது மோசம்" என்று கூறித் தப்பிக் கொண்டது.

யாழ்ப்பாண மக்கள் அத்தனை பேரும் புத்தியுள்ளவர்கள். "எங்களை ஏமாற்ற முடியாது" என்னும் பதிலைத்தான் நகர சபைத் தலைவருக்கு அளிப்பார்கள்.

## நால்வர் மகாநாடு முறிவு உலகில் பெரிய பிளவு

### பேர்லினில் ரஷிய அந்நியநாட்டு மந்திரி

### தென்னுப்பிரிக்காவிலும் இந்தோனேஷியாவிலும் ஜெர்மன் நாஜிகளுக்கு வேலை!

லண்டன், டிச. 16

ஜெர்மனியைப்பற்றி நான்கு வல்லரசுகளின் மகாநாடு முறிந்தபின் ரஷிய அந்நியநாட்டு மந்திரி மொலட்டோவ் பேர்லினுக்குப் பயணமானர். பிரஞ்சு அந்நியநாட்டு மந்திரி பாரிசுக்கும் அமெரிக்க அந்நியநாட்டு மந்திரி வாஷிங்டனுக்கும் இன்னும் 48 மணி நேரத்தில் பயணமாவார்கள்.

மகாநாடு முறிந்ததுபற்றி பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரி நாளை பாராளுமன்றத்தில் அறிவிப்பார்.

நான்கு வல்லரசுகள் மகாநாடு முறிவுற்றதால் ரஷியாவுக்கும் மேற்கத்திய வல்லரசுகளுக்குமிடையே பிளவு அதிகரித்திருப்பதாகவும் இதற்கு ரஷியா மீது பழிபோட அவைகள் தந்திரம் செய்தன என்றும் மாஸ்கோ ரேடியோ குற்றஞ் சாட்டுகிறது. திரு. மொலட்டோவ் பேர்லினிலுள்ள ரஷிய அதிகாரிகளைச் சந்தித்து மகாநாடு முறிந்துபோனதால் ஏற்பட்டுள்ள நிலைமைபற்றிக் கலந்து பேசினர்.

தென்னுப்பிரிக்காவிலும் இந்தோனேஷியாவிலும் போய் வேலைபார்க்க பிரிட்டனும் அமெரிக்காவும் ஜெர்மனியில் நாஜிகளைத் திரட்டுவதாக மாஸ்கோ ரேடியோ குற்றஞ் சாட்டுகிறது.

## இந்தோனேஷியாவில் டச்சு வம்பு

### பொதுஜன வாக்கெடுப்பை குடியரசு மந்திரி கோருகிறர்

பட்டேவியா, டிச. 16

மூவர் கமிஷனின் சமரச முயற்சி வெற்றிபெருவிடில் இப்பொழுது டச்சு ஆதிக்கத்திலுள்ள இந்தோனேஷிய பிரதேசங்களில் பொதுஜன வாக்கெடுப்பு நடத்தும்படி, ஐக்கிய தேச ஸ்தாபனத்தைக் கேட்க வேண்டுமென்று இந்தோனேஷிய குடியரசு உள்நாட்டு மந்திரி டாக்டர். முகமதுரோவம் தெரிவித்தார்.

இந்தோனேஷிய குடியரசுத் தலைவர்களுக்கு ஆபத்து ஏற்படும் முறையில் டச்சுத் துருப்புகள் எல்லைகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக இந்தோனேஷிய குடியரசு பிரதம மந்திரி ஷாரிபுடின் தெரிவித்தார். (ராய்ட்டர்)

## பட்டுவத்தையில் கத்திக்குத்து

கொழும்பு, டிச. 18

பட்டுவத்தையில் மீன் விற்பவரில் சிலர் அதே தொழில் செய்யும் ஆரோன் பர்னுண்டோ என்னும் வயோதிபரைக் கத்தியால் குத்திப் பலத்த காயமேற்படுத்தினர். அபாயகரமான நிலையில் காயமேற்பட்டவர் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்.

## பட்டு வியாபாரம் பாழடைகிறது

### விலையேற்றம்தான் காரணம்

கொழும்பு, டிச. 18

சில நாட்களுக்கு முன் பட்டுகளுக்கு விதித்திருக்கும் இறக்குமதி வரியால் பட்டுப் புடவைகளின் விற்பனவு மிகப்பாதிக்கப்படுகிறது. இதனல் பல வருடங்களாக பட்டுப் புடவை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த பலர் அதை தொடர்ந்து நடத்துவது அசாத்தியமெனக் கருதுகின்றனர்.

பிரபல புடவை வியாபாரிகள் ஒரு கூட்டம் கூடி மந்திரிக்குத் தங்கள் குறைகளையும் வியாபார நிலையையும் எடுத்துக் காட்டும் வண்ணம் ஓர் மனுச் செய்ய உத்தேசித்திருக்கின்றனர். விலை கூடியதால பொருட்களை வாங்குவோர் குறைந்து இறக்குமதியும் வர வர குறையும். இப்படிக் குறைவதால் இப்போ விதிக்கப்பட்ட வரியால் அரசாங்கத்துக்கு வருவாயும் குறைய நேரிடும். பலர் நேரே இந்தியாவுக்குச் சென்று தங்கள் தேவைக்கேற்ற பட்டுப் புடவைகளை வாங்கி தங்களோடு கொண்டு வர எத்தனிப்பார்கள்.

இதைவிட கள்ளத்தனமான இறக்குமதி மென்மேலும் அதிகரிக்கும் என்றும் கருதுகின்றனர்.

## உணவுக் கணக்கால் 78 கோடி ரூபாய் நஷ்டம்

கொழும்பு, டிச. 18

1946-ம்ஆண்டுசெப்டம்பர் மீ 30உவரைக்கும் அரிசி, மா என்னும் இரு உணப் பொருட்களால் இலங்கைக்கு 78 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக இலங்கை கணக்குப் பரிசோதகரின் அறிக்கை வெளிப்படுத்துகிறது.

பொதுஜன பாதுகாப்பு அதிகாரியின் இலாகாவைப்பற்றிக் குறிக்கும்போது தான் விடுத்திருந்த 578 கேள்விகளில் 279 தான் பதிலளிக்கப்பட்டன வென்றும் இன்னும் 299-க்கு பதிலைக் காணேம் என்றுங் குறிக்கிறர்.

பதிலளிக்கப்பட்ட 279ல் 181 பதில்களே தன்னல் ஏற்கப்பட்டனவென்றும் மற்றவை திருப்திகரமாகவில்லையென்றும் குறிக்கிறர்.

## கட்சி நிதியிலிருந்து கைலஞ்சம்

### டாஸமேனியா பிரதம மந்திரி பதவி இழந்தார்

ஹோபார்ட், டிச. 16

டாஸமேனியா தீவின் பிரதம மந்திரியான திரு. ராபர்ட் காஸ்கிரேவ் கட்சி நிதியிலிருந்து கைலஞ்சம் வாங்கியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதால் பிரதமமந்திரி பதவியிலிருந்து ராஜினமா செய்து விடும்படி டாஸமேனியாகவர்னர் உத்தரவிட்டதாக திரு. காஸ்கிரேவ் நேற்று நடைபெற்ற ஆஸ்திரேலியதொழிற்கட்சி நிர்வாகக்கமிட்டி முன்பு தெரிவித்தார். ஒருவாரத்திற்கு முன்பு இக்குற்றம் சாட்டப்பட்டது. டாஸமேனியா பிரதமர் தொழிற் கட்சியைச் சேர்ந்தவர். ஆகவே டாஸமேனியா பிரதமர் டாஸமேனியா தொழிற்கட்சித் தலைவர் பதவியையும் இழந்தார். அவருக்குப் பதில் உதவிப் பிரதம மந்திரி புரூக்கர் கட்சித் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். (ராய்ட்டர்)

## ஈரானுக்கு ஈடன் செல்கிறர்

லண்டன், டிச. 16

பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சியின் உப தலைவரும் யுத்தகாலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அந்நியநாட்டு மந்திரியாக இருந்தவருமான திரு. அந்தோனி ஈடன் இம்மாதக் கடைசியில் ஈரானுக்குச் செல்கிறர். அங்கு அவர் ஆங்கிலோ-ஈரான் எண்ணெய்க் கிணறுகளுள்ள ஸ்தலங்களுக்கு விஜயம் செய்வார். (ராய்ட்டர்)

# புதுமணத் தம்பதிகளுக்குப் பொக்கிஷப் பணம்

## வருடத்திற்கு 50 ஆயிரம் பவுண்

## காமன்ஸ்சபை அனுமதியளித்தது

### குறைக்க வேண்டுமென்று சில தொழிற் கட்சி அங்கத்தினர்கள் விவாதம்

லண்டன், டிச. 17

இளவரசி எலிசபெத்தின் செலவுக்கு வருடத்திற்கு 40 ஆயிரம் பவுண் கொடுக்கவேண்டுமென்றும், அவரது கணவர் எடின்பரோகோமகனுக்குவருடம் 10 ஆயிரம்பவுண் கொடுக்கவேண்டுமென்றும் இன்று காமன்ஸ்சபையில் அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை தொழிற்கட்சியைச் சேர்ந்தஅங்கத்தினர்கள் எதிர்த்தனர். ஒவ்வொரு இனத்திலும் 5000 பவுண் குறைக்க வேண்டுமென்று அவர்கள் ஒருதிருத்தப் பிரேரணை கொண்டு வந்தனர். இத்தீர்மானத்தை ஏகமனதாக அங்கத்தினர் ஆதரிக்க வேண்டுமென்று பிரதம மந்திரி அட்லி எவ்வளவோ வேண்டியும் தீர்மானத்தை எதிர்த்தவர்கள் அதைவோட்டுக்குவிடவேண்டுமென்று வற்புறுத்தினர். தீர்மானம் வோட்டுக்கு விடப்பட்டதில் சாதகமாக 345 வோட்டுகளும் பாதகமாக 33 வோட்டுகளும் கிடைத்து தீர்மானம் நிறைவேறியது.

இளவரசி எலிசபெத் பிரிட்டிஷ் சிம்மாசனத்தின் வாரிசு ஆனபடியால் பிரிட்டிஷ் சாம்ராஜ்பத்திற்கே அரசியாகும் உரிமையுடையவராதலால், அவரது கண்யத்திற்கும் அந்தஸ்திற்கும் தக்கபடியும் நாட்டின் பொருளாதார நிலைமைக்குத் தக்கபடியுமே இச்செலவினம் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக திரு. கிரிப்ஸ் தெரிவித்தார். திரு. கிரிப்ஸ் மேலும் கூறியதாவது:-

சிம்மாசன வாரிசு என்ற முறையில் நிறைவேற்ற வேண்டிய பலவித அலுவல்களுக்காக ஆகும் செலவுகளுடன் அவரது சொந்த செலவுக்கு ஆகும் 5000 பவுண் செலவையும் சேர்த்தால் மொத்தம் இளவரசி எலிசபெத்துக்கு வருடம் 50 ஆயிரம்பவுண் செலவாகும். ஏற்கனவே இளவரசி 15 ஆயிரம்பவுண் பெற்று வருகிறர். அதோடுகூட இப்பொழுது 35 ஆயிரம் பவுண் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. நாட்டின் பொருளாதார நிலைமையை உத்தேசித்தே எலிசபெத் இளவரசி சொந்தச் செலவுக்கு குறைந்த பட்சமாக 5000 பவுண் கொடுப்பதென நிர்ணயிக்கப்பட்டது. அவரது கணவராகிய எடின்பரோ கோமகனர்பணவிஷயத்தில்எவரையும் சாராதிருக்கும் பொருட்டு அவருக்கு 10 ஆயிரம்பவுண் வழங்க நிச்சயிக்கப்பட்டது இந்தத் தொகை மன்னரின் இளையபுத்திரர்களுக்குக்கொடுக்கப்படும் தொகையின் அளவேயாகும். இதைவிட இன்னும் சிக்கனம் செய்வதற்கு இடமில்லை.

முன்னரெல்லாம் சிம்மாசன வாரிசுக்கு 80 ஆயிரம் பவுண் அல்லது 90 ஆயிரம் பவுண் வழங்குவது வழக்கம். அதற்கு வருமானவரி கிடையாது. ஆனல் இப்பொழுது எலிசபெத் இளவரசிக்குக் கொடுக்கும் பணத்தில் 4000 பவுணுக்கும் எடின்பரோ கோமகனுக்குக் கொடுக்கும் பணத்தில் 2000 பவுணுக்கும் வருமானவரி உண்டு.

பொது ஜனங்களின் பணத்திலிருந்து அதிகமாகச் செலவு செய்யலாகாதென்று கருதி மன்னர் தன் சொந்த பணத்திலிருந்து ஒரு லட்சம் பவுண் கொடுக்க முன்வந்துள்ளார். இது 4 வருடத்திய செலவாகும். யுத்தகாலத்தில் செலவைக் குறைத்து மீதப்படுத்தி மன்னர் அரசாங்கக் கடன் பத்திரங்களில் போட்டு வைத்துள்ள இரண்டு லட்சம் பவுணில் ஒரு லட்சம் பவுணை கொடுக்க முன்வந்துள்ளார். இப்பணத்தின் வட்டித் தொகை 20,000 பவுணை அரசாங்கத்திற்கு உதவ அனுமதித்திருக்கிறர்.

மன்னர் அளித்த இப்பணமும் அரசாங்கம் அளிக்கும் பணமும் இளந்தம்பதிகளின் பொறுப்பான கடமைகளை நிறைவேற்ற உதவி செய்யுமென்றும் நான் கருதுகிறேன்.

எலிசபெத் இளவரசிக்கும் எடின்பரோ கோமகனுக்கும் வழங்கும் பணத்தைக் குறைக்கவேண்டுமென்று எதிர்வாதம் செய்பவர்களைக் கண்டித்த கன்சர்வேடிவ் அங்கத்தினர் சர் ஜான் ஆண்டர்சன் பேசினர்.

பிரிட்டிஷ் மக்கள் குடியரசை விரும்புவார்களேயாகில் முடியைச் சுமப்பவர்களுக்கு படியளக்க வேண்டுவது அவசியமென்றும் அந்த முடியின் கண்ணியத்தைக் காப்பது மக்கள் கடமையென்றும் தொழிற் கட்சி அங்கத்தினர் ஆர்தர் கிரீன்வுட் பேசினர்.

தொழிற்கட்சி அங்கத்தினர் ரோனுல்ட் சேம்பர் லெயின் பேசியபோது, இளவரசு தம்பதிகளுக்கு வருடத்திற்கு 5 ஆயிரம் பவுணை 10 ஆயிரம்பவுணை சொந்தச் செலவுக்குக் கொடுத்துவிடவேண்டுமென்றும், மற்றப்படி வாரிசு என்ற முறையில் அவர்கள் செய்யும் அரசாங்கக் கடமைகளுக்குச் செலவாகும் பணத்தை அரசாங்கச் செலவினத்தில் கணக்கெழுதிக் கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்தார்.

தொழிற்கட்சி அங்கத்தினர் ஜான் மக்கவன் பின்வருமாறு கூறினர்:-

மன்னருக்கும் மகாராணிக்கும் கொடுக்கப்படும் பணத்தில் எவ்வித திருத்தமும் கூடாது. ஆனல் அடுத்தபடியாக இளவரசு தம்பதிகளுக்கு படிச்செலவு கொடுப்பதில் நாம பழைய முறையை அறவே விட்டொழிக்க வேண்டும். இப்பணத்தில் பெரும் பகுதி ஏராளமான வேலைக்காரர்களை அமர்த்திக்கொள்ளவும் சாப்பிட்டு விட்டுச் சும்மா இருக்கும் அலங்கார உத்தியோகஸ்தர்களை வைத்திருக்கவுமே செலவாகும். இந்த இளந்தம்பதிகள் சம்பந்தப்பட்டமட்டில் இந்த பழைய மாமூலை ஒழிக்கவேண்டும்.

தீர்மானத்தை ஆதரித்து அந்தோனி ஈடனும். பிரதம மந்திரி அட்லியும் பேசினர்கள்.

இளவரசிக்குக் கொடுத்து வரும் 15 ஆயிரம் பவுணுக்கு மேல் 25 ஆயிரம் பவுண் கொடுக்கவேண்டியதவசியமில்லையென்று எம்ரிஸ ஹியூஜஸ் ஒரு திருத்தப் பிரேரணை கொண்டு வந்து பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

இளவரச தம்பதிகள் நீண்ட ஆயுளுடன் சௌக்கியமாகவும் ஒற்றுமையாகவும் வாழ வேண்டுமென்று விரும்புகிறேன். ஆனல் பொற்கூண்டிலடை பட்டுள்ள அக்கிளிகளை அக்கூண்டிலிருந்து விடுவிக்க வேண்டுமென்பதே என் அவா. பழைய பழக்கமென்று மாமூலான, நிர்ப்பந்தமான வழக்கங்களால் எட்டாவது எட்வர்ட் மன்னர் (வின்சர் கோமகன்) சங்கடப்பட்டது போல அவைகளால் இப்புது மணத் தம்பதிகளும் சங்கடப்படலாகாது அவர்களது வாழ்க்கையின் போக்குகாலத்திற்கேற்பபுதியமுறையில் மாறவேண்டும். இத்திருத்தத்தை கமியூனிஸ்டு அங்கத்தினர் வில்லியகலாசான் ஆதரித்தார். தீர்மானத்திற்கு ஆதரவாக 345 வோட்டுகளும் பாதகமாக 33 வோட்டுகளும் கிடைத்து திருத்தம் தோல்வியுற்றது. எலிசபெத் இளவரசியின் செலவு தொகையில் 5000பவுண் குறைக்க வேண்டுமென்று தொழிற்கட்சித் தலைவர் மோரிஸ் வெப் ஒரு திருத்தம் கொண்டு வந்தார். இத்திருத்தத்திற்கு ஆதரவாக 165 வோட்டுகளும் பாதகமாக 291 வோட்டுகளும் கிடைத்ததால் திருத்தம் தோல்வியுற்றது.

கட்சி பேதமின்றி சுதந்திரமாக இத்தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று திரு கிரிப்ஸ் கேட்டுக்கொள்ளவே தீர்மானம் வோட்டுக்கு விடப்படாமலே நிறைவேற்றப்பட்டது.

## கிளாஸ்டர் கோமகன் இலங்கை வருகிறர்

### இலங்கை பாராளுமன்றத்தைத் திறந்து வைப்பார்

லண்டன், டிச. 17

இலங்கைப் பிரதம மந்திரியின் அழைப்புக்கிணங்கி இலங்கையின் சுதந்திர விழாவில் பங்குபற்ற வருகிற பெப்ரவரியில் கிளாஸ்டர் கோமகனும் அவர் பாரியாரும் இலங்கைக்கு விஜயம் செய்வார்களென பக்கிங்ஹாம் மாளிகையிலிருந்து உத்தியோகதோரணையில்வெளியிடப்பட்டது.

இலங்கை சுதந்திரமடைந்ததும் கூடவிருக்கும் முதல் பாராளுமன்ற நிகழ்ச்சியை ஆரும் ஜார்ஜ் மன்னருக்குப் பதிலாக அவரது தம்பியான கோமகன் திறந்து வைப்பார்.

பெப்ரவரி 8-ம் தேதி வரையில் விமான மார்க்கமாக இவர்கள் இலங்கைக்கு வருவார்களென்றும் 10 நாட்கள் வரையில் இங்கு தங்குவார்களென்னவும் அறியப்படுகிறது. [ராய்ட்டர்]

## பிலிப் குணவர்தனவின் அப்பீல் ஏற்க மறுக்கின்றனர்

லண்டன், டிச. 17

சட்ட விரோதமாகத் தொழிலாளரைப் பயமுறுத்தியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு கொழும்பு தெற்கு நீதிபதியால் 3மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட திரு. டி. பீ. ஆர். குணவர்தன சுப்ரீம்கோர்ட்டுக்கு மனுப் பண்ணினர். இந்த மனுவை சுப்ரீம் கோர்ட் நீதிபதி நிராகரித்தார். இதன் பின் பிரிவி கௌன்ஸிலுக்கு மனுப் பண்ண விசேஷ அனுமதி கோரினர். பிரிவி கௌன்ஸிலாரும் அனுமதி கொடுக்க மறுத்து விட்டனர்.

இதனல் திரு. குணவர்தன பாராளுமன்ற நிகழ்ச்சிகளில் பங்கு பற்ற முடியாது.

திரு. குணவர்தன சம சமாஜகட்சியின் ஓர் தூண் போன்றவர். (ராய்ட்டர்)

## கழனிப் பகுதி தேர்தல் ஆட்சேபனை மனு

### நீதிபதி வின்ட்ஹாம் விசாரிப்பார்

கொழும்பு, டிச. 18

கழனிப் பகுதி தேர்தல் ஆட்சேபனை மனுவை நீதிபதி பஸநாயக்கா ஜனுவரி 13-ம் தேதி தொடக்கம் விசாரிப்பாரென நியமிக்கப்பட்டிருந்தது.

இது மாற்றப்பட்டு அத்திகதியில் நீதிபதி வின்ட்ஹாம் விசாரிக்கவேண்டுமென மாற்றப்பட்டிருக்கிறது.

கழனிப் பகுதி அங்கத்தவரான நிதி மந்திரி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் தேர்தலை ஆட்சேபித்து அப்பகுதி வாக்காளர்களிலொருவரான கே. ஏ. பெரேரா என்பவர் மனுச்செய்திருக்கிறர்.

## தபால் நிலைய விடுமுறை

கொழும்பு, டிச. 19

தபால் தலைமை அதிகாரியின் காரியாலயம் கிறிஸ்மஸை முன்னிட்டு டிசம்பர் 24-ம் தேதி தொடக்கம் ஜனவரி 2-ம் தேதி வரை பூட்டப்படும் எனத் தெரிகிறது.

ஆகவே பொது மக்கள் தாம் தபால்களை திருப்பி அனுப்புவது சம்பந்தமாக எழுதும் கடிதங்களை கொழும்பின் பிரதம தபால் அதிகாரிகளுக்கே எழுதும்படி கோரப்படுகிறர்கள்.

## பிரதமரின் இந்திய விஜயம்

### பாகிஸ்தான் அனுப்பியுள்ள செய்தி

கொழும்பு, டிச. 18

டிசம்பர் 28, 29, 30-ம் தேதிகளில் புதுடில்லியில் இலங்கை இந்தியப் பிரச்னை சம்பந்தமாக இலங்கைப் பிரதமர் திரு. சேனநாயக்காவுக்கும், இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் நடக்கும்.

தமது இந்திய விஜயத்தின் போது திரு. சேனநாயக்கா இந்தியகவர்னர் ஜெனரல் மவுண்ட்பேட்டன் பிரபுவின் விருந்தாளியாக இருப்பார்.

டிசம்பர் 31-ம் தேதி அவர் டில்லியில் இருந்து புறப்பட்டு கராச்சி சென்று அங்கு பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் எம். ஏ. ஜின்னுவைக் கண்டு பேசுவார்.

அதன்பின் அவர் பம்பாய், சென்னை முதலிய இடங்களுக்குப் போய்விட்டு ஜனுவரி 4-ம் தேதி இலங்கை வந்து சேர்வார் எனத் தெரிகிறது.

பாகிஸ்தான் அந்நிய நாட்டுக் காரியதரிசி இலங்கைப் பிரதமரின் பாகிஸ்தான் விஜயம் சம்பந்தமாக இலங்கையின் அயல் நாட்டு நிரந்தரக் காரியதரிசி கே. வைத்தியநாதனுக்கு ஓர் தந்திச் செய்தி அனுப்பியுள்ளார். அதில் பாகிஸ்தான் பிரதமரும் காயிதே ஆஜம் ஜின்னுவும் இலங்கைப் பிரதமர் வருகையையிட்டுச் சந்தோஷிப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

டிசம்பர் 26ல் பிரதமரும் கோஷ்டியும் இலங்கையை விட்டு விமானமூலம் புறப்படுகின்றனர். 27-ம் தேதி அவர்கள் சாந்திக்ஷேத்திரம் செல்லுவார்கள் எனவும் அறியப்படுகிறது.

## யாழ்ப்பாண சுகாதார இலாகா வைத்தியருக்கு பிரியா விடை

யாழ்ப்பாணம், டிச. 17

யாழ்ப்பாணத்திலிருந்து மாறிப்போகும் சுகாதார வைத்தியர் டாக்டர் எஸ். சி. துரைராசா அவர்களுக்கு யாழ்ப்பாண நகரசபை அங்கத்தவர்களும் தலைவரும் நேற்று ஓர் விருந்து அளித்தனர்.

திரு. கே. வி. சின்னத்துரை பேசியபோது யாழ்ப்பாண மக்களை திருப்திப்படுத்துவது எவராலும் முடியாதபோதிலும் டாக்டர். துரைராசா கடந்த 8 வருடங்களாகத் தனது கடமைகளைச் செவ்வனே ஆற்றியிருக்கிறர் என்பதைப் பாராட்டினர்.

மாஜி நகரசபைத் தலைவரான திரு. சாம். ஏ. சபாபதி பேசுகையில் டாக்டர் துரைராசா வேறிடங்களில் கடமையாற்றி மேற்பதவிகள் வகித்திருக்கக்கூடுமாயினும் யாழ்ப்பாண வாசிகளுக்கு நன்மைசெய்யும் நோக்கத்தோடு தன் நலத்தை நாடாது யாழ்ப்பாணத்திலேயே இருந்ததைப் பாராட்டினர். ஆனல் இவர் இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் குறிப்பாக முஸ்லிம் வட்டாரத்தில் ரோட்டைப் பாவிப்பவர்களுக்கு வசதியீனமாகப் பல கட்டடங்களையமைக்க அனுமதித்திருப்பது வருந்தத்தக்கது என்றும் குறிப்பிட்டார்.

திரு. பி. காசிப்பி. திரு. எஸ். பதஞ்சலி முதலியோர் பேசிய பின் டாக்டர் துரைராசா பதிலளிக்கையில் எல்லோருக்கும் நன்றி பாராட்டியபின் திரு. சபாபதி குறித்த குறையைப் பற்றிப் பேசினர். வீடு கட்டும் திட்ட விதிகளை அமுல் நடத்துவது நடைமுறையில் அசாத்தியமென்றும், ரோட்டருகில் சுவர்கள் கட்டப்பட்டிருந்த போதிலும் சுகாதாரத்துக்கு மாறான கட்டிடங்களில்லையென்றும் குறித்தார். (ந-ரி)

## அரேபிய வர்த்தகர் கொண்டுவந்த கள்ள தங்கம்

### கராச்சியில் கைப்பற்றப்பட்டது

கராச்சி, டிச, 17

சென்ற வாரக் கடைசியில் பாரசீகக் குடாவிலிருந்து இங்கு வந்த ஒரு கப்பலில் வந்த அரேபிய வர்த்தகர்களிடமிருந்து ரூ. 80,000 மதிப்புள்ள கள்ள தங்கத்தை சுங்க இலாகா அதிகாரிகள் கைப்பற்றினர்.

### கள்வர்களைப் பிடிக்க போலீசார் ஜரூர்

நகர வாயில்களில் நடு சாமத்திலும் காவல்

கொழும்பு, டிச. 17

வெளிக்கடை ஜெயிலில் இருந்து இரு தடவை தப்பியோடிய பிரபல கார் கள்வன் ஜயசுந்தராவையும் இன்னொருவனை டொன் சார்ள்ஸ் என்பவனையும் கைப்பற்றுவதற்காக பொலீசார் பகீரத முயற்சி செய்து வருகின்றனர்.

கொழும்பு நகரின் பல வாயில்களையும் பொலிஸார் ஆயுதபாணிகளாக இரவிரவாகக் காவல் காத்து நிற்கின்றனர். இத்தகைய காவல் விக்டோரியா, கிரிலப்பொனை, தெஹிவளை, பாமன்கடைப் பாலங்களிலும், ஹை லெவல் ரோட்டிலும் அதிக ஜரூராக இருக்கிறது. இரு கள்வர்களும் கொழும்பிலே ஒரு களவு மோட்டாரில் ஓடித் திரிவதாக நம்பப்படுகிறது.

இக் கள்வர்களில் டொன் சார்ள்ஸிடம் யந்திரத் துப்பாக்கிகள், சுழல் துப்பாக்கிகள் முதலிய பலவும் இருப்பதாக நம்பப்படுகிறது. இவன் ஒரு மாஜி போர்வீரன் என்றும், தனது யுத்த சேவை காலத்தில் கள்ளத்தனமாகப் பல ஆயுதங்களைக் கொண்டுவந்து சேர்த்துவிட்டான் என்றும் நம்பப்படுகிறது.

ஜயசுந்தராவைப் பிடித்துத் தருவோருக்கு 2000 ரூபாயும் டொன் சார்ள்ஸைப் பிடித்துத் தருவோருக்கு 1000 ரூபாயும் தரப்படும் என அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது.

### பிரிட்டிஷ் வைத்திய சங்கக் கூட்டம்

உணவு வரிகளைப்பற்றி ஆலோசிக்கும்

கொழும்பு, டிச. 17

இன்று மாலை பிரிட்டிஷ் வைத்திய சங்கத்தின் கூட்டம் ஒன்று நடைபெறும். அப்போது உணவு வகைகள் மீது புதிதாக விதிக்கப்பட்டுள்ள வரிகளால் நாட்டின் தேகாரோக்கியம்-முக்கியமாகக் குழந்தைகளின் ஆரோக்கியம் எவ்விதம் பாதிக்கப்படும் என்பது ஆராயப்படும்.

### வியட்நாமுக்கு பூரண சுதந்திரம்

பிரஞ்சு ஆசிரியர் கூற்று மறுக்கப்படுகிறது

சைகோன், டிச. 16

இந்தோசைனாவில் ஒரு மாதம் சுற்றுப் பிரயாணம் செய்த பிரஞ்சு ஆசிரியர் டுஹமல் வியட்நாம் பத்திரிகா நிருபர்களிடம், வியட்நாம் கூடிய சீக்கிரம் பூரண சுதந்திரத்தை அடையுமென்றார். இக் கூற்று உண்மையல்ல என்றும் அவர் ஆசிரியரேயன்றி அரசியல்வாதியல்லவென்றும் பிரஞ்சு அரசாங்க அதிகாரிகள் மறுத்தனர்.

# காசி ஹிந்து சர்வகலாசாலையில் சைவசித்தாந்த வளர்ச்சிக்கு நிதி

## மதுரைத் தமிழ்த் திருநாளுக்கு நிதிமந்திரி ஆர். கே. ஷண்முகம் தலைமை வகிப்பார்

## ராஜாஜி பெயரில் உபகாரச் சம்பள திட்டத்திற்கு 2 கோடி ரூபாய் திரட்ட சென்னை பிரதமர் வேண்டுகோள்

கும்பகோணம், டிச 17

காசி ஹிந்து சர்வகலாசாலையில் சைவ சித்தாந்த வளர்ச்சிக்காக காசி மடம் [திருப்பனந்தாள்] ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் ரூபாய் 20,000 மேற்படி சர்வகலாசாலையை உப அத்தியக்ஷகர் ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் பெயரால் மூலதனம் வைத்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. இதற்குப்பெயர் "ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் சைவ சித்தாந்த உபகாரச் சம்பள மூலதனம்" என்று வைக்கப்பட்டிருக்கிறது. வருஷம் ரூபாய் 135 வீதம் எம். ஏ. வகுப்பில் படிக்கும் 4 மாணவர்களுக்கு இந்த உபகாரச் சம்பளம் அளிக்கப்படும். இம்மாணவ மாணவிகள் ஏழைகளாகவும் தகுதியுள்ளவர்களாகவும் தமிழை இரண்டாம் பாடமாகவும் சைவ சித்தாந்த வேதாந்தத்தை இஷ்டபாடமாகவும் எடுத்துக்கொண்டவர்களாயிருக்க வேண்டும். இந்த மூலதனத்தை சர்வகலாசாலையார் ஏற்றுக்கொண்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் சைவ சித்தாந்த வளர்ச்சிக்காக ஏற்கெனவே ரூபாய் 60,000 மூலதனம் ஏற்படுத்தி அதைக்கொண்டு காசி ஹிந்து சர்வகலாசாலையில் சைவ சித்தாந்த பீடம் ஒன்று ஸ்தாபித்திருப்பது இங்கு குறிப்பிடக்கூடியதாகும்.

**விலகினார்**

காசி, டிச. 17

ஸர் ராதாகிருஷ்ணன் காசி சர்வகலாசாலை உப அத்தியக்ஷகர் பதவியிலிருந்து ராஜிநாமா செய்தார்.

**தேவாரம் பாடுவோருக்குப் பரிசு**

திருப்பனந்தாள் மடத்தின் ஏற்பாடு

கும்பகோணம், டிச. 17

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் (காசி மடம் திருப்பனந்தாள்) காசி மடத்தின் ஸ்தாபகராகிய ஸ்ரீலஸ்ரீ ஆதிகுமரகுருபரஸ்வாமிகளின் ஞாபகார்த்தமாய் தேவாரம் நன்ருகப் பாடுகிறவர்களுக்கு பரிசளிக்க ரூபாய் 5000 மூலதனம் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார். நன்ருக பாடுகிறவர்களுக்கு ரூபாய் 60, 50 ஆக ஒவ்வொரு வருஷமும் இரண்டு பரிசுகள் அளிக்கப்படும். இந்த பரிசுகளைப் பெற தகுதியுள்ளவர்கள் திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் எல்லையிலுள்ள 4-வது முதல் 6-வது பாரங்களில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு அளிக்கப்படும்.

ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர ஸ்வாமிகள் 17-வது நூற்றாண்டில் தமிழ் கலையை காசி முதல ராமேஸ்வரம் வரையில் வளர்த்து நம் தெய்வத் தமிழ் மொழிக்குப் பெரும் சக்தியைக் கொடுத்தவராவர். இவர் அவதரித்த இடம் ஸ்ரீவைகுண்டம். மாணவர்களிடையே தேவாரம், திருமறைகள் நன்கு பரவ இந்த பரிசு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

**மதுரையில் தமிழ்த் திருநாள்**

மதுரை, டிச. 17

அடுத்த மாதம் 2, 3, தேதிகளில் இந்நகரில் நடக்கவிருக்கும் தமிழ் திருநாள் வைபவத்திற்கு இந்திய யூனியன் நிதி மந்திரி ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியார் தலைமை வகிப்பார். மும்முரமாக கொண்டாட்ட ஏற்பாடுகளை வரவேற்பு கமிட்டியினர் நடத்தி வருகின்றனர்.

**ராஜாஜியின் பெயரில் உபகார சம்பளத்திட்டங்கள்**

சென்னை, டிச. 17

ராஜாஜியின் பெயரில் சர்வகலாசாலைகளில் உபகாரச் சம்பளத் திட்டங்கள் பாட திட்டங்கள் முதலியவை ஏற்படுத்துவதற்காக இரண்டு கோடி ரூபாய் நிதி வேண்டுமென்று சென்னை பிரதமர் ஓமந்தூர் பி. ராமசாமி ரெட்டியார் ஒரு வேண்டுகோள் விடுத்தார். கவர்னர் மாளிகையில் உள்ள சர்க்கார் விருந்து மண்டபத்தில் ராஜாஜி ஜயந்தி சம்பந்தமாக நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் இம்மாதிரி கேட்டுக்கொண்டார்.

சபா மண்டபத்தை ராஜாஜி மண்டபமெனப்பெயரிட வேண்டுமென்று இக்கூட்டத்தில் ஒரு யோசனை வெளியிடப்பட்டது. இந்த யோசனையை அங்கு கூடியிருந்த மக்கள் கரகோஷம் செய்து வரவேற்றனர்.

### கண்டி தேர்தல் ஆட்சேபனை மனு

மனுதாரின் சாட்சியம்

கொழும்பு, டிச. 17

கண்டி பிரதிநிதியும் கைத்தொழில் மீன்பிடி இலாகா மந்திரியுமான ஜார்ஜ் ஈ டி சில்வாவின் தேர்தலை ஆட்சேபித்து தேர்தலில் தோல்வியடைந்தவரான டி. பி. இலங்கரத்ன என்பவர் செய்த மனு நீதிபதி வின்ட்ஹாம் முன்னிலையில் விசாரிக்கப்படுகிறது.

விசாரணையின்போது அவர் கூறியதாவது:—

"எதிரி தன்னை நிந்தித்து பல பத்திரிகைகளும் துண்டுப் பிரசுரங்களையும் விடுத்திருக்கிறார். அவைகளில் "குட்டிக்கரணம்" "விஜயா" என்பன எதிரியால் வெளியிடப்பட்டன என்பதை வலுப்படுத்த எதிரி அச்சடிப்பித்த முழு செலவில் இவற்றை அடிப்பித்த செலவும் குறிக்கப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டினார்.

கண்டியில் தேர்தல் நாட்களுக்கு முன் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால அநேக வீடுகள் அழிந்தமையால் வீடின்றித் தவித்தனர். அவர்களுக்கு நிவாரணஞ்செய்து நகரசபையார் பல விடுதிகளை ஏற்படுத்தியிருந்தனர்.

அவ்விடுதிகளில் ஒன்றுக்கு மனுதார் சென்றபோது நகரசபைத் தலைவர் பிரெட் டி சில்வாவும் அவருடைய பிதாவாகிய எதிரியும் அங்கு நின்றனர். அவர்கள் விடுதியிலுள்ள எவரையும் பேட்டி கண்டு தேர்தலில் தன்னை ஆதரிக்கும்படி கேட்க மனுதாரை அனுமதிக்கவில்லையாம்.

இன்னொரு விடுதிக்கு போனபொழுதும் எதிரி பின்தொடர்ந்து சென்று "இந்தக் கைலஞ்சம் வாங்கும் விலத்தப்பட்ட குமாஸ்தா இங்கே என்ன செய்கிறான்?" என்று மனுதாரைக் கேட்டாராம்."

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

### கறையான் புற்றெடுக்க பாம்பு குடி கொள்வதா?

அநுராதபுரத்தில் கமக்காரர் நிலை; தொழிலாளர் வெளியேற மறுப்பு

அநுராதபுரம், டிச, 17

1942-ல் தொடங்கிய நடுத்தர வகுப்பார் குடியேற்றத்திட்டத்தின்படி அநுராத புரத்திலுள்ள கொப்பக்குளம் என்னுமிடத்தில் 32 பேருக்குக் காணிகள் பிரித்துக் கொடுபட்டிருக்கின்றன. இவர்களுக்குக் கொடுபட்டது ஒருவருக்கு 25 ஏக்கர் வீதம் இவர்களில் ஒவ்வொருவரும் சராசரி 5000 ரூபாவுக்குமேல் செலவு செய்தும் தமது பிரயாசத்தாலும் இக்காணிகளைத் திருத்தியிருக்கின்றனர். இவர்கள் திருத்திப் பண்படுத்திய காணிகளில் முன் அரசினர் தோட்டத்தில் வேலை பார்த்த தொழிலாளரிற் சிலர் திடீரெனப்போய் குடியேறிவிட்டனர்; வெளியேறவும் மறுக்கின்றனர். அடாத்தாகக் குடியேறியவர்களில் ஒருவர் காணிச் சொந்தக்காரன்மீதும் நெல்லைக் காக்கும் உத்தியோகஸ்தர் ஒருவர்மீதும் தனக்குச் சொந்தமான 90 புசல் நெல்லைக் களவாடிவிட்டனர் என்றும் குறஞ்சாட்டி கோர்ட்டில் மனுச் செய்திருக்கிறார்.

தொழிலாளரின் நண்பர் எனச் சொல்லிக்கொள்ளும் ஒரு சிலர்தான் இந்த அடாத செய்கைகளைச் செய்யும்படி இவர்களை ஏவுகிறார்களெனவும் தெரிகிறது.

### கார் விபத்து

சிலாபம், டிச. 16

சிலாபம் போலிசைச்சேர்ந்த இன்ஸ்பெக்டர் பெரேரா சென்ற வெள்ளிக்கிழமை ஓர் பெருத்த கார்விபத்தில் அகப்பட்டு கொழும்பு ஆஸ்பத்திரியில் அபாயகரமான நிலையிலிருக்கிறார்.

இவரும் இன்னொரு கான்ஸடபிளும் இரவில் காரில் கரசோதனைக்குப் போய்திரும்புகையில் சிலாபத்திலிருந்து 2 மைல் தூரத்திலிருக்கும் பங்கதேனியாவில் கார் பாதையிலிருந்தும் விலகி கானுக்குள் வீழ்ந்தபோது புரண்டு இன்ஸ்பெக்டர் கீழே அகப்பட்டார். கான்ஸடபிளுக்குக் காயமில்லை.

அக்ரா, கோல்ட் கோஸ்ட் டிச. 17

கோல்ட் கோஸ்டிலுள்ள சுதேசிகளின் தலைவர்களில் 63 பேர் சட்டசபைகளில் தமது பதவியை ரத்தாக்க ஒத்துக் கொண்டார்கள் எனத் தெரிகிறது. இதன் மூலம் பொது மக்களின் சுயாட்சிக்கு அவர்கள் உதவி புரிந்துள்ளனர். [ராய்ட்டர்]

### மலேயாவில் கம்யூனிஸ்டுகள் ஆதிக்கம்

குடியேற்ற நாட்டு மந்திரிக்கு கவர்னர்கள் புகார்

பிரிட்டிஷ் தூதகோஷ்டி மலேயாவுக்கு அனுப்பப்படும்

லண்டன், டிச. 16

மலேயா யூனியனிலும் சிங்கப்பூரிலும் தொழிற் சங்கங்கள் கம்யூனிஸ்டுகள் ஆதிக்கத்திற்குட்பட்டிருப்பதால் நிலைமை அதிருப்திகரமாக இருப்பதாக சிங்கப்பூர் கவர்னரும் மலேயா யூனியன் கவர்னரும் குடியேற்றநாட்டு மந்திரி திரு. ஜோன்ஸுக்கு அறிக்கைகள் அனுப்பியிருக்கின்றனர்.

அங்குள்ள தொழிற்சங்க தொழிற் சங்க இயக்கத்தைப் பரிசீலனை செய்ய பிரிட்டிஷ் தொழிற் சங்க தூதுக்கோஷ்டியொன்றை அனுப்ப உத்தேசித்திருப்பதாக ஸர் ஜோன்ஸ் தெரிவித்தார்.

### இலங்கை முஸ்லிம்களுக்கு முப்தியின் செய்தி

கொழும்பு, டிச. 17

அகில-இலங்கை பாலஸ்தீன பிரிவினை எதிர்ப்புக் கமிட்டிக் காரியதரிசி ஏ. ஹுசைன மாக்கான் மரிக்காருக்கு ஜெருசலேமின் முப்தி பின்வருமாறு ஒரு செய்தி அனுப்பியுள்ளார்:

"இலங்கை முஸ்லிம் சகோதரர்கள் யூத மதத்தையும் அடிமைத்துவத்தையும் எதிர்த்து நாம போரிடுவதை ஆதரிப்பதற்கும், எமது புனித பாலஸ்தீன பூமியைப் பிரிவினை செய்வதை எதிர்ப்பதற்கும் எங்களது ஆழ்ந்த நன்றியைத் தயவு செய்து தெரிவிக்கவும். உங்கள மானசீக, பொருளுதவியை நாம ஆவலுடன் எதிர்பார்க்கிறோம் பாலஸ்தீன் கிராண்ட் முப்தி அமின் ஹுசைன்."

### அர்ச். மரியாயின் பாடசாலை பழைய மாணவர் சங்கம்

பம்பலப்பிட்டி, டிச. 16

டி சங்கத்தின் மாதாந்த கூட்டம் கடந்த ஞாயிறுவாரம் காலையில் சங்கத் தலைவர் திரு. ஏ பி தம்பிராஜா அவர்கள் தலைமையின் கீழ் பள்ளிகூட மண்டபத்தில் நடந்தேறியது அன்றைய கூட்டத்தில அங்கத்தவர் ஏகோபித்த அபிப்பிராயத்தின்பேரில் நிர்வாக உத்தியோகஸ்தவரிடையே சில மாற்றங்கள் செய்யப்பட்டன. ஈற்றில் தலைவர் அவர்களால் அங்கத்தவரின் கடமைகளைப்பற்றி விபரமாக எடுத்துரைக்கப்பட்டது

# காஷ்மீர் படையெடுப்புக்கு காரணம் ஓர் ஆங்கிலேயர்

## கொடூரங்கள் இழைக்க ஆப்கானியர்களை தூண்டினார்

ஜம்மு, டிச 17

"இந்தியாவில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருப்பதால் இவ்வருடம் அங்கு செல்ல வேண்டாமென்று அரசர் ஸகீர் ஷா ஆப்கானியர்களுக்கு ஆலோசனை கூறினார். ஆனால் வட வஜிரிஸ்தானிலுள்ள ஓர் அரசாங்க அதிகாரி (ஆங்கிலேயர்) ஜம்மு, காஷ்மீர் படையெடுப்பில் கலந்துகொள்ளுமாறு ஆப்கானியர்களை தூண்டினார்" என்று கஸ்னி என்ற இடத்தைச் சேர்ந்த ஓர் ஆப்கானியரான லால்மிர் என்பவர், டிபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஸ்ரீ. ஸி. பாலி முன் வாக்குமூலம் தந்தார்.

பாகிஸதான் - ஜம்மு எல்லையில் சென்ற வாரம் கைதான கொள்ளைக் கூட்டத்தினரில் லால்மிர் ஒருவராவர். இவர் மேலும் சொன்னதாவது:- 1000 ஆப்கானியர்களுடன் சென்ற மாதம் நான் இந்தியா வந்தேன். எனது கோஷ்டி புறப்படுமுன், இந்தியாவுக்கு இப்பொழுது புறப்பட வேண்டாமென்று ராஜா ஆலோசனை கூறினார். மன்னரின் புத்திமதியை புறக்கணித்து நாங்கள் வட வஜிரிஸதான் அரசாங்க அதிகாரியின் காரியாலயத்திற்கு வந்து சேர்ந்தோம் இவ்விடத்தில் இந்திய நிலைமைபற்றி இவ் அதிகாரி எங்களிடம் பேசினார் இந்தியாவுக்கு நாங்கள் வருபோதெல்லாம் பண்ணு கோட்டையில் ஆயுதங்களை சமர்ப்பித்து விடுவது வழக்கம். ஆனால் இம்முறை ஆயுதங்களுடன் வர அனுமதியளிக்கப்பட்டோம்.

இந்திய பிரதேசத்தில் நாங்கள் கால்வைத்தவுடன் சில முஸலிம் லீகர்கள் எங்களை அணுகி இஸலாத்தின் பெயரில போராடுமாறு கேட்டுக்கொண்டனர். வானுவின் பீரும் எங்களிடம் வந்து இம்மாதிரி கூறினர். நாங்கள் வஜ்ராபாதத்திற்கு அழைத்துவரப் பட்டோம். இங்கு பாகிஸதான் ராணுவமும், போலீசும் எல்லைப்புறபோலிஸ அதிகாரிகளும் பிரசன்னமாயிருந்தனர். ஆயுதங்களும் தளவாடங்களும் இவ்விடத்தில் விநியோகிக்கப்பட்டன. இவ்விதத்தில் தேக வலிவு கொண்டயாவரும் ஜம்மு படையெடுப்பில் கலந்துகொண்டோம்.

# இலங்கை-இந்தியா உடன்பாடு ஏற்பட்டு விடும்

## ஸ்ரீ. கிரியின் நம்பிக்கை

சென்னை, டிச. 17

டில்லியில் நடைபெறவிருக்கும் சம்பாஷணைகளின் விளைவாக இந்தியா இலங்கைக்கிடையே திருப்திகரமானசமரசம் ஏற்படுமென தாம் நம்புவதாக இலங்கையில் இந்தியாவின் ஹைகமிஷனரான ஸ்ரீ வி. வி. கிரி இன்று கூறினார். டில்லி செல்லும் வழியில் அவர் சென்னைக்கு வந்திருக்கிறார்.

இந்தியப் பிரதமர் பண்டித நேருவுக்கும் இலங்கைப் பிரதமர் ஸ்ரீ சேனநாயக்காவுக்குமிடையே சம்பாஷணைகள் 28-ம் தேதி ஆரம்பமாகி 30-ம் தேதி வரையில் நடைபெறுமென்று கூறினர். இந்திய சர்க்கார் அழைப்பின்பேரில் ஸ்ரீ சேனநாயகா 27-ம் தேதி டில்லிக்கு வந்து சேருவார் என்றும் டில்லியில் கவர்னர்—ஜெனரலின் விருந்தினராக இருப்பார் என்றும் ஸ்ரீ கிரி சொன்னார்.

ஸ்ரீ கிரி மேலும் சொன்னதாவது:-

இன்று இந்தியா இலங்கை இரண்டும் தங்கள் விவகாரங்களை பைசல் செய்து கொள்ள சுதந்திரமுடைய நாடுகளாதலால் சமரசம் செய்து கொள்ள இது நல்ல தருணமாகும். இலங்கை, இந்தியா இரண்டிடங்களிலும் ஒரு விஷயம் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இலங்கைவாழ் இந்தியர் இருதேசங்களின் பிரஜைகளாக இருக்க முயற்சி செய்யக்கூடாது என்பதே அது. உடன்பாடு ஏற்பட்டால் இலங்கையில் ஒரு குறிப்பிட்ட காலம் வசித்த இந்தியர்கள் தாங்கள் எந்தத்தேசபிரஜைகள் என்பதை தெளிவாக அறிவித்துவிட வேண்டும். ஸ்ரீ கிரி 23உ டில்லிக்கு கிளம்புகிறார். அவர் சென்னையிலிருக்கையில் இந்தியா-இலங்கை பிரச்னைபற்றி பொது ஸ்தாபனங்களைத் தெரிந்து கொள்வார்.

**ஆசிரியருக்குக் கடிதம்**

# "தமிழ்ப் பிரமுகர்கள்" யார்?

ஐயா,

"கொழும்பில் சில தமிழ்ப் பிரமுகர்கள் கூடி ஓர் அகில இலங்கை தேசியத் தமிழர்கள் மகாநாடு" என்ற ஒரு மகாநாட்டைக் கூட்ட விரும்பதாக நேற்று (17-12-47) வெளிவந்த ஒரு ஆங்கில பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்துள்ளது. இத்தமிழ்ப்பிரமுகர்கள் எங்கு கூடினார்கள்? யார் யார் அப்பிரமுகர்கள்? அவர்களின் நோக்கம் என்ன என்பதை நீங்கள் இப்பத்திரிகை மூலம் அறிய இடம் தருவீர்களா?

உண்மையில் தமிழ்ப் பிரமுகர்கள் கூடியிருந்தால் அவர்கள் கூடிய இடமும், அவர்களின் நாமதேயங்களும் வெளிவந்திருக்குமல்லவா? இதைவிட்டு தனியே நிர்வாகஸ்தர்களின் பெயர்கள்தான் அப்பத்திரிகைச் செய்தியில் வெளிவந்திருக்கின்றன. உண்மையைத் தெரிவிப்பீர்களா?

கொழும்பு, இங்ஙனம்,
18-12-47 மு. சிவகுரு.

[இதேமாதிரி எமக்கும் கூட்டம் நடைபெற்றுள்ளதாக ஒரு டைப் அடித்த செய்தியை ஒருவர் தபால்மூலம் அனுப்பியிருந்தார். ஆயின் அச்செய்தியின் கூட்டம் எங்கு நடைபெற்றதென்றும், யார் தலைமை வகித்தார் என்றும் கூறுதிருந்தமையாலும், பத்திரிகை ஆசிரியர்கள் தத்தம் நிருபர்களை அனுப்புமாறு முன் கூட்டியே கூட்டக்காரர் அழைப்பு அனுப்பாதமையாலும் நாம் அச்செய்தியைப் பிரசுரிக்கவில்லை.

ஆசிரியர்: "சுதந்திரன்"]

### உடுகம பகுதி பாராளுமன்ற அங்கத்தவர்

கார் விபத்தில் சம்பந்தப்பட்டார்

களுத்துறை, டிச. 17

பாராளுமன்றத்தில் உடுகம பகுதிக்கு அங்கத்தவரான டி. எஸ். குணசேகரா தனது சாரதியால் செலுத்தப்பட்ட காரில் சென்றுகொண்டிருக்கும் சமயம் குசுமாவதி என்னும் பெண் குறுக்கே சென்றதால் தட்டுப்பட்டு அவளுடைய கால்களும் நாடியும் உடைந்தும் முறிந்தும் விட்டன.

அவள் ஆஸ்பத்திரிக்கு அனுமதிக்கப்பட்டாள் அவள் நிலை அபாயகரமாயிருக்கிறது.

### ஓடும் காரில் ஏறியதால் விழுந்து மடிந்தார்

கொழும்பு, டிச. 18

டொம்பே என்னுமிடத்தில் வசிக்கும் ஏ. ஆரோன்சிங்கோ என்பவர் ஓடிக்கொண்டிருந்த கார் ஒன்றில ஏற முயன்றபொழுது வழுகி விழுந்து பல காயங்கள் ஏற்பட்டதால் கொழும்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகும் வழியிலேயே இறந்துவிட்டார்.

### பாராளுமன்ற அங்கத்தவருக்கு வரவேற்பு

கொழும்பு, டிச. 18

கொட்டகல பகுதிக்குப் பாராளுமன்ற அங்கத்தவரான சி. குமாரவேலுவுக்கு கப்புஹலஸ்தலாவைச் சோனகரால் கலுடமடையில் ஓர் வரவேற்பளிக்கப்பட்டது.

அக்குறணைப் பாடசாலை தலைமை ஆசிரியர் எம். மன்சூர் வரவேற்புரையில் இலங்கையின் எல்லா வகுப்பினரும் ஒற்றுமையாகி எல்லாரும் இலங்கை வாசிகளென்பதையுணர்ந்து ஒத்துழைக்கவேண்டியதை எடுத்துக்காட்டினார்.

குமாரவேல் அவ்வரவேற்புக்கு அப்பகுதிச் சோனகருக்கு தன நன்றியறிதலைத் தெரிவித்து அப் பகுதியிலுள்ள எக்குறையையும் தான் கவனிப்பதாகவும் வாக்களித்தார்.

அறிவித்தல்

சிலோன் சீட்டுக்கம்பெனி லிமிடெட்,

எமது பதிவு செய்யப்பட்ட ஆபீஸ், 13 1/10 பெயிலி ஸ்ரீட் கோட்டை, (கொழும்பு 1) என்னும் இடத்துக்கு மாற்றப்பட்டு இருக்கிறது.

எங்கள், கம்பெனி நடத்தும் ஏலச்சீட்டுகளில் பதிவுசெய்து கொள்ளுங்கள்

கவர்ன்மென்டு செக்யூரிட்டியோடு நடப்பவை. பணத்துக்கு பூரண உத்திரவாதம் தரப்படுகிறது. சிறுசேமிப்பு பெரும் உதவி செய்கிறது.

விபரங்கள் தபால் மூலமோ நேரிலோ பெறலாம்.

அரு. மெ. மெய்யப்ப செட்டியார்,
மானேஜிங் டைரக்டர்.

துயரம் கொண்டு துன்புறுதீர்கள்

வைத்தியர்களால் கைவிடப்பட்ட எமக்கு முதல் தடவை பாவித்த மட்டில் திருப்தியான சுகம் கொடுத்தது.

சிர நேத்திராஞ்சனத் தைலம்

வைத்திய நிபுணர் திரு. R. E. W. யோகரெட்னம் (L. A. M; M. C. P. & S (Cal) யாழ்ப்பாணம் எழுதுவதாவது:

"சிரநேத்திராஞ்சன தைலம்" பலவாட காலமாக அனுபவமும் பெயரும் பெற்றுள்ளதும் M. K. ஜெகநாதன் கண் வைத்தியரால் தயாரிக்கப்பட்டுள்ளது இது சிரசு, கண் சம்பந்தமான சகல ரோகங்களுக்கும் போதிய சுகம் கொடுக்கத் திறமைவாய்ந்தது என்பதை எனது மனமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சிர நேத்திராஞ்சனத் தைலம்

கண் புகைச்சல், குத்து, கூச்சம், மாலைக்கண், சிவப்பு முதலிய கண் சம்பந்தமான சகல ரோகங்களையும், தும்மல், நீர் வடிதல் முதலிய பீனிச வகைகளையும், கபால இடி, தலைவலி, மயக்கம், இருமல், இளைப்பு, நரம்புத் தளர்ச்சி, மூலச்சூடு ஆகிய ரோகங்களையும் நிவிர்த்தி செய்து, குளிர்ச்சியையும், ஞாபக சக்தியையும் கொடுக்கும். அஸ்மா, காசம், நீரழிவுக்கும் ஓரளவு சுகங்கொடுக்கும். காலம் நீடித்த நோயாளர்கள் நேரிலும் கடிதமூலமும் விபரம் தெரிந்துகொள்ளலாம்.


இழந்த கண்ணொளியை திரும்பவும் ஒளிபெறச்செய்யும்
Regd. No 2036
M.K. ஜெகநாதன்
பெரிய கடை
யுநாநி கண்வைத்தியநிலையம் யாழ்ப்பாணம்
ஏழைகளுக்கு இலவச வைத்தியம்
KNJ

விலாசம் ஆங்கிலத்தில் தெளிவாய் எழுதுக.

2 அவுன்ஸ் சீசா ரூ. 3-25

4 அவுன்ஸ் சீசா ரூ. 5-50

# "ஊர்காவற்றுறை நீர்க்கடவையை அபிவிருத்தி செய்க"

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

காரர் பதவியில் நியமிக்கப்பட்டவர்கள் பலர் தங்கள் சம்பளங்களை எடுக்க மாத்திரம் கச்சேரிகளுக்குப் போவதாகக் குறிப்பிட்டார்.

ஊர்காவற்றுறை நீர்க் கடவை போக்குவரத்து நஷ்டத்துக்கு உதவும் மான்யம் ரத்துச் செய்யப்பட வேண்டுமென்று கூறிய திரு ஸி வன்னியசிங்கம், இந்த நீர்க்கடவை பிரயாணம் சுமார் 4 மணி நேரம் எடுப்பதாகக் குறிப்பிட்டார்.

**திரு தம்பியையா:-** "இந்த நீர்க் கடவையை நிர்வகிப்பதற்கு அரசாங்கம் வருடத்தில் குறைந்தது ரூ. 10,000 ஆகுதல் செலவிட வேண்டும். ஜலக் கடவை பாதையை தயார் செய்வதானல் அதனல் அரசாங்கத்துக்கு 10 லட்சம் ரூபாய் செலவாகும். இப்பொழுது இந்த நீர்க் கடவையைக் கடந்து நீதிமன்றம் செல்லவேண்டிய தீவுவாசி ஒருமுறை பிரயாணத்துக்கு 2 சதம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நீர்க் கடவை பிரயாணச் செலவு அரசாங்கத்தால் ஏற்கப்பட வேண்டும். நீதி மந்திரி மான்ய அதிகரிப்புக்கு கொண்டுவந்த திருத்தப் பிரேரணைகள் நிறைவேறின.

அனுதைகள் ஸ்தாபனங்களுக்கு மான்யம் அளிப்பது பற்றி விவாதம் நடந்தது. இதற்கு ரூ 300,000 ஒதுக்கப்பட்டுள்ளது. திரு தஹநாயக்கா இத் தொகையில் ரூ. 10 குறைக்க வேண்டுமென்று ஒரு பிரேரணை கொண்டுவந்து பேசுகையில் அனுதைகள் விடுதிகளில் உள்ள சில குழந்தைகள் சரியாகக் கவனிக்கப்படவில்லையென்றும் பாராளுமன்றக் காரியதரிசி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கூறினர். அனுதைகள் விடுதியை தனிப்பட்டவர்களிடம் விடாது அரசாங்கமே பார்த்துக்கொள்ள வேண்டுமென்று திரு ஸ்ரீ நிசங்கா கூறினர். திரு ஜே. ஏ. மார்ட்டின்ஸ பேசியபின் திரு ரெஜி பெரேரா பேசுகையில் ரத்மலானையிலுள்ள கைத்தொழில் விடுதி சரியாக நடத்தப்படவில்லையென்றும் வேறும் அனுதைகள் விடுதிகள் ஒழுங்காக நடத்தப்படவில்லையென்றும் சில அனுதைகள் விடுதிகள் ஒழுங்கீனமான விஷயங்களுக்காகவே நடத்தப்படுவதாகவும் கூறினர். இவைபற்றி கவனிக்கப்படுமென்று உள்நாட்டு இலாகா பாராளுமன்ற காரியதரிசி கூறினர். மான்யத் தொகை நிறைவேறியது. 51-வது பகுதி மான்யத் தொகை முழுவதும் நிறைவேற்றப்பட்டது.

கலால் இலாகா (பகுதி 52) மான்யம் ரூ.22,936,469 சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது. இதில் ரூ. 100 குறைக்கப்பட வேண்டுமென திரு ஸி. டி. எல் குணவர்தன பிரேரணை கொண்டுவந்து பேசுகையில், சாராய வடிகட்டும் தொழில் திருத்தப்பட வேண்டுமென்றும் இதற்காக வெளிநாட்டிலிருந்து நிபுணர் தருவிக்கப்பட வேண்டுமென்றும், அரசாங்க சாராய வடிகட்டும் தொழிற்சாலையில் இருந்து விற்கப்படும் சாராயம் ஆகக்குறைந்த ரகத்தைச் சேர்ந்ததென்றும் கூறினர்.

திரு கே. கனகரத்தினம் பேசுகையில் கலால் இலாகா அதிகாரிகள் எண்ணிக்கை மிகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறினர்.

திரு காரியப்பர் பேசுகையில் அவசிய காலத்துக்காகவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூறினர். இத்துடன் சபை பிற்பகல் 4 மணிக்கு தேனீர் இடைவேளைக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

தேனீர் இடைவேளைக்குப் பின் கலால் இலாகா மான்ய விவாதம் தொடர்ந்து நடைபெற்றது.

**திரு கே. கனகரத்தினம்:-** தற்காலிக அதிகாரிகளை என்ன செய்யஆலோசிக்கப்பட்டுளது.

**திரு காரியப்பர்:-** அவர்கள் நிலைமைபற்றி ஆதரவுடன் கவனிக்கப்படும். திருத்த பிரேரணை திரும்பஅவரால்எடுக்கபட்டது.

யாழ்ப்பாண தலைமைக்காரர் மாதப் படிச்செலவுகளை ரூ. 6000 அதிகரிப்பது சம்பந்தமாக நிதி மந்திரி கொண்டுவந்த பிரேரணையை திரு கே. கனகரத்தினமும் திரு வி. குமாரசாமியும் ஆட்சேபித்தனர்.

இருக்கப்படாதென்றும் சாராயவடிகட்டும் பகுதியிலுள்ள ஒரு நீர்வாய்க்கால் இந்த சாராயவடிகட்டுமிடத்திலுள்ள கழிவு பொருள்களால் அசுத்தமாக்கப் பட்டுள்ளதாகவும் இது பொது மக்களுக்கு கெடுதலானதென்றும் கூறினர்.

திரு சாம்சில்வா பேசுகையில் கலால் இலாகா இன்ஸபெக்டர் முதலியோருக்கு கள்ளமாக சட்டவிரோதமாக சாராயம் விற்போர் மாதவீதம் பணம் கொடுப்பதாகவும் குற்றச்சாட்டுகளை சரியான முறைப்படி சூப்ரின்டண்டுகள் விசாரணை செய்யவேண்டுமென்றும் கூறினர். இவை பற்றி கவனிக்கப்படுமென்று திரு காரியப்பர் கூறினர்.

**திரு வி. குமாரசாமி:-** மது இறக்கும் மரங்களின் சொந்தக்காரர்களுக்குத்தெரியாது இவர்கள்மது இறக்குகின்றனர் இவற்றுக்கெல்லாம் மரங்களின் சொந்தக்காரர்கள் சில சமயங்களில் பணம் கட்டவேண்டிவந்துவிடுகிறது.

இது சட்டவிஷயமென்று சபாநாயகர் குறிப்பிட்டார்.

**திரு ரம்புக்போதா:-** மரவரி முறை அமுலில் இருக்கும் வரையும் கிராமப் பகுதிகளில் கள்ளமாக கள் இறக்கப்படுவதை ஒழிக்க முடியாது.

திருத்தப் பிரேரணை திரும்பவும் பிரேரித்தவரால் எடுக்கப்பட்டது.

சாராயம் போத்தல்களில்அடைப்பது ஸ்டோர்களுக்கு அனுப்புவது முதலானவற்றுக்கு ஒதுக்கப்படும் மான்யம் ரூ 373,343 சம்பந்தமாக விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அரசாங்கத்தின் சாராயம் வடிகட்டும் தொழிற்சாலை மான்யம் சம்பந்தமாக விவாதிக்கப்பட்டபோது இம்மான்யத் தொகையை ரத்துசெய்யும்படி திரு ஸி. வன்னிய சிங்கம் பிரேரணை கொண்டுவந்தார். இது பின்னர் திரும்ப எடுக்கப்பட்டது. இந்த மான்யமும் நிறைவேறியது.

போலிஸ் இலாகா (பகுதி 53) மான்யம் ரூ. 13,274,810 சம்பந்தமாக விவாதம் நடைபெற்றது இத்தொகையில் ரூ 10-00 குறைக்கவேண்டுமென்று கூறி திரு தஹநாயகா பேசுகையில் போலிஸ அதிகாரிகள் சிலர் வேலைநிறுத்தக்காரர்களின் எதிரிகளாக மாறி அவர்களைக்குழப்பிவிட்டனரென்றும் தொழிலாளரின் விரோதிகள் என்றும் தமக்கு மாருகவும் போலிஸார் ஒரு பிழையான குற்றச்சாட்டை கொண்டுவந்திருந்தனரென்றும் பாராளுமன்ற அங்கத்தினரின் முறையீடுகளை போலிஸார் சரியாக கவனிக்கிறார்களில்லையென்றுங் கூறினர்.

திரு ரெஜி பெரேரா பேசுகையில் போலிஸ் கமிஷனின் சிபார்சுகள் இன்னும் அமுல் நடத்தப்படவில்லையென்றும் ! போலிஸ் இலாகா உள் நிர்வாகம்பற்றியும் கூறினர். திரு எச். ஸ்ரீ நிசங்கா பேசுகையில் போலிஸ படைபற்றி தேசமே பெருமைப்படவேண்டிய விஷயமென்றும் போலிஸ் கமிஷனின் சிபார்சுகளை உடனே தாமதமன்றி அமுலுக்குக்கொண்டுவர பாராளுமன்ற காரியதரிசி நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றும் போலிஸ படையில் இராணுவ தொடர்புமுறை இருக்கப்படாதென்றும் கூறினர்.

திரு காரியப்பர் பேசுகையில் போலிஸ் படையினர் சட்டத்தையும் தேச சமாதானத்தையும் பாதுகாக்கவே இருக்கின்றனரென்றும் போலிஸ் கமிஷன் சிபார்சுகள் படிப்படியாக அமுலுக்குக் கொண்டுவரப்படுவதாகவும் கூறினர். திரு ராபர்ட் குணவர்தன பேசுகையில் போலிஸ இலாகா நிர்வாகத்தை நடத்த இப்பொழுதைய போலிஸ இன்ஸபெக்டர் ஜெனரல் தகுதியானவராவென்று கேட்டார்.

தொழிலாளர் இயக்கத்துக்கு எதிராக போலிஸாரின் அதிக்கிரமமான நடத்தைபற்றி டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கூறுனர்.

போலிஸ படையினர் ஒரு கட்சியையும் சேர்ந்தவர்களல்லவென்று திரு காரியப்பர் கூறினர். இப்பதிலுக்கு டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா நல்ல சாட்டை கொடுத்தார்.

திரு ஹென்றி பீரிஸபேசுகையில் போலிஸ சூப்ரின்டெண்ட், உதவி சூப்ரின்டெண்ட் முதலியோருக்கு போலிஸ கான்ஸடபிள்களை வேலை நீக்கம் செய்யும் அதிகாரம் கொடுக்கப்படாது என்று கூறினர். திருத்தப் பிரேரணை வாபஸ் பெறப்பட்டது நானுவித செலவு மான்யத்தில் ரூ. 4000 குறைக்கும்படி திரு வி. வன்னியசிங்கம் ஒரு பிரேரணை கொண்டுவந்தார். மேலும் வாழ்க்கைப்படிச் செலவை [ரூ. 3,272,500] ரூ 5000 குறைக்கும்படியும் அவர் ஒரு பிரேரணை கொண்டு வந்தார். தேர்தல் காலத்தில் போலிஸ உத்தியோகஸதருக்கு படிச் செலவுகள் கொடுக்கப்படாததுபற்றி டாக்டர் பெரேரா குறிப்பிட்டார்.

நிதிமந்திரி ஒரு மான்யத் தொகையை ரூ 35,000 த்திலிருந்து ரூ. 41,000 ஆக அதிகரிக்க வேண்டுமென்று கொண்டுவந்த திருத்தப் பிரேரணைக்கு பலத்த எதிர்ப்பு இருந்தும் அது சபையில் நிறைவேறியது

நிதிமந்திரி ஹின்னியப்பு என்பவரின் (விதவை) மனைவிக்கும் பிள்ளைகளுக்கும மான்யம் கொடுக்கப்படவேண்டுமெனக் கொண்டுவந்த பிரேரணை நிறைவேறியது.

விசேட இரகசியப் போலிஸ அதிகாரிக்காக ரூ. 15,000 மான்யம் ஒதுக்கப்பட்டதுபற்றி பேசுகையில் இடதுசாரிகளை வேவு பார்க்கவா இச்செலவு என்று டாக்டர் சில்வாவும் டாக்டர் பெரேராவும் கேட்டார்கள்.

போலிஸார் தேசத்தில் கலகங்களை ஏற்படுத்த முயலுப் யாரையும் வேவு பார்க்க முடியுமென்று திரு டி எஸ். சேனநாயகா கூறினர். நிதி மந்திரி இம்மான்யம் பற்றி விளங்கப்படுத்தினர். இது சம்பந்தமான திருத்தம் தோல்வியுற்றது.

போலிஸ் இலாகா மான்யத்தின் பின் சிறை இலாகா மான்யம் ரூ. 4,007,700 சம்பந்தமாக (பகுதி 54) விவாதம் நடந்தது. ஒரு திருத்தப் பிரேரணை கொண்டுவந்த டாக்டர் பெரேரா சிறை இலாகாவில் இட நெருக்கடி பற்றியும் அதன் அபிவிருத்திக்கு இடமுண்டென்றும் கூறினர். திரு ரெஜி பெரேரா பேசுகையில் சிறை இலாகாவின் நிர்வாகம் அதிருப்தியைக் கொடுப்பதாகத் தெரிவித்தார். திரு. ஜே. ஸி. டி. கொத்தலாவலயும் இதனை ஆதரித்தார். திரு பீட்டர் கெனமன் பேசுகையில் இலங்கை சிறை இலாகா திருத்தியமைக்கப்பட்டு மற்ற நாடுகளிலுள்ள சிறை இலாகாக்களைப் போன்று அமைக்கப்பட வேண்டுமென்றும் இலங்கை நிலைமைகள் பற்றியும் கூறினர்.

பேராசிரியர் பேக்மன் பேசுகையில் சிறை இலாகாத் திருத்தங்கள் உடனே அமுல் நடத்தப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்.

சிறை இலாகா நிர்வாகம் பற்றி டாக்டர் பெரோரா பேசுகையில் அதன் அபிவிருத்திகள் பற்றி குறிப்பிட்டார். திரு. ராபர்ட் குணவர்தன பேசுகையில் சிறைக்கு வைக்கப்பட்ட ஒருவர் பற்றி குறிப்பிட்டார்.

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவும் பேசினர். நிதி மந்திரியின் திருத்தப்பிரேரணைகள் நிறைவேறின. சிறை இலாகாவுக்கு அனுப்பப்படும் உணவுகள் பற்றி டாக்டர் சில்வாவும் டாக்டர் பெரேராவும் குறிப்பிட்டனர். இவ் விஷயங்களில் விசாரணை செய்யப்பட வேண்டிய விஷயங்களும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

திரு தஹநாயகா பல திருத்தப் பிரேரணைகளைக் கொண்டு வந்தார். அவை திரும்பவும் எடுக்கப்பட்டன. நிதி மந்திரியின் திருத்தப் பிரேரணைகள் நிறைவேறின.

அடுத்தபடியாக (பகுதி 55) அரசாங்க பரிசோதனை இலாகா மான்யம் ரூ. 276,416 நிறைவேறியது. மிருகக் காட்சிசாலை மான்யம் (பகுதி 56) ரூ. 145,184 நிறைவேறியது. மாகாண நிர்வாகம் (அவசர காலத் திட்டங்கள்) (பகுதி 57) மான்யம் ரூ 665,393 நிறைவேறியது உணவு உற்பத்திக்காகத்தான் இந்த அவசரகால ஏஜண்டுகள் இருக்கின்றனர் என திரு தஹநாயகா கேட்டதற்கு பிரதமர் திரு சேனநாயகா பதிலளிக்கையில் அதற்காகவே அவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர் என்றும் அவர்களின் கடமைகள் பற்றியும் கூறினர்.

**திரு வி. குமாரசாமி:-** வட மாகாணத்தில் உதவி அரசாங்க மாகாண அதிகாரிகள் ஒரு வேலையும் செய்வதில்லை. உணவு உற்பத்திக்கு அவர்களால் ஒரு வேலையும் செய்யப்படுவதும் இல்லை. குளங்களைத் திருத்தியமைத்து விவசாயத்தை வளர்க்க அவர்கள் ஒன்றும் செய்யவில்லை.

முல்லைத் தீவிலே ஒரு அவசரகால கச்சேரியை ஸதாபிக்க வேண்டும் இப்பொழுது இப்பகுதியிலுள்ள மக்கள் பெர்மிட்டுகள் முதலானவற்றைப் பெறுவதற்கு 65 மைல் பிரயாணம் செய்து வவுனியாவுக்கு வந்து வாங்க வேண்டியிருக்கிறது.

அடுத்தபடியாக ரிஜிஸ்டிரார் ஜெனரல் காரியாலய மான்யம் நிறைவேற்றப்பட்ட பின் அரசாங்க அச்சக மான்யம்பற்றி விவாதிக்கப்பட்டது.

திரு தஹநாயகா பேசுகையில் அரசாங்க அச்சுக்கூடத்திலிருந்து சிவில் உத்தியோக விஞப் பத்திரங்கள் வெளியானது சம்பந்தமான அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லையென்றுகூறினர்.

தொழிலாளர்கள்பற்றியும் பால் விநியோகம்பற்றியும் திரு தஹநாயகா பேசினர். திரு காரியப்பர் இவற்றைக் கவனிப்பதாகத் தெரிவித்தார். இத்துடன் இரவு எட்டு மணியானதால் நடவடிக்கை போஜன இடைவேளைக்காக ஒத்திவைக்கப்பட்டது.

இரவு போஜன இடைவேளைக்குப் பின் இந்த மான்யம் நிறைவேறியது. தகவல் இலாகா (பகுதி 60) மான்யம்பற்றி திரு பீட்டர் கெனமன் பேசுகையில் அரசாங்க செலவில் இந்த இலாகா யூ என். பி பிரசாரம் செய்வதாகக் கூறினர்.

அரசாங்கங்கள் சொந்தத் தகவல் இலாகாக்களை வைததிருப்பது வழக்கமென்று நிதி மந்திரி கூறினர்.

யூ என். பி. பத்திரிகைக்கு எழுதுபவருக்கு அரசாங்க நிதியிலிருந்து பணம் கொடுக்கப்படுவதாகவும் அந்த அதிகாரி அரசாங்க செலவில் முழு நேரமும் யூ என். பி. காக வேலை செய்வதாகவும் டாக்டர் பெரேரா கூறினர். பலரும் இந்த இலாகாவைக் கண்டித்துப் பேசினர்.

பிரதமரும், திரு ரத்னயகாவும் பேசிய பின திரு வி. குமாரசாமி இந்த இலாகாவை ஒழித்துவிடவேண்டுமென்றும் கூறினர் திரு சிவபாலன், டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா ஆகியோரும்பேசினர். அரசாங்கத்தை நம்பமுடியாதென்றும் ஒரு கமிட்டியை நியமித்து அரசாங்க நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தவேண்டுமென்றும் டாக்டர் சில்வா கூறினர். இந்த மான்யம் ரத்துச் செய்யப்பட வேண்டுமென திரு கெனமன் கூறினர். இத்திருத்தம் தோல்வியுற்றது.

பாராளுமன்றத் தேர்தல் செலவு மான்யம்பற்றி விவாதம் (பகுதி 61) நடந்தது திரு தஹநாயக்கா தேர்தல் வாக்காளர் ஜாபிதா அமைப்புகளைக் கண்டித்தப் பேசினர். வாக்காளர் ஜாபிதா திருத்தப்பட வேண்டுமென்றும் திருத்தியமைக்கப்பட்டு தேர்தல் நடப்பதானல் இந்த அரசாங்கம் தோற்கடிக்கப்படுமென்றும் திரு தஹநாயக்கா கூறினர். பலர் பேசிய பின் இந்த மான்யம்நிறைவேறியது. இதன்பின் சபை ஒத்திவைக்கப்படும் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

திரு கிரேஷியன் பேசுகையில் ரப்பர் விற்பனை, அரசாங்க பண உதவி முதலியனபற்றி பேசினர். வர்த்தக மந்திரியின் நடவடிக்கைகளைக் கண்டித்தும் ரப்பர் ஏற்றுமதிகள்பற்றியும் ஏற்றுமதியாளரின் சுரண்டல்பற்றியும் கூறினர்.

திரு டபிள்யூ. பெரேரா பேசுகையில் ரப்பர் விலை குறையுமென்பது வர்த்தகர்களுக்கு பல நாட்களுக்கு முன்பே தெரியுமென்று கூறினர்.

திரு சுந்தரலிங்கம் இவற்றுக்குப் பதிலளித்தார். இதன் பின் பாராளுமன்ற நடவடிக்கை இன்று பிற்பகல் ஒரு மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது

---

ரோமாபுரி, டிச. 16

இத்தாலி பொதுத் தேர்தலை ஏப்ரல் 4-ம் தேதிக்குப் பின் ஏப்ரல் 18-ம் தேதிக்குள் நடத்துவதென புதிய இத்தாலி மந்திரி சபை முடிவு செய்தது. (ராய்ட்டர்)

---

## போலிஸ் சார்ஜண்ட்-கான்ஸ்டபிள்கள் சங்கத் தடை ரத்தாகாது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீதுள்ள தடை நீக்கப்பட்டுள்ளது. போலிஸ சார்ஜண்டுகள், கான்ஸ்டபிள்கள் சங்கத்தின் மீதுள்ள தடையையும் நீக்கப்படுமா?

(ஆ) அவ்விதமின்றேல்,போலிஸ படையில் உள்ள குறைந்த உத்தியோகஸ்தர் அரசாங்கத்துக்கு தங்கள் குறைகளை எடுத்துகூற ஒரு மத்திய ஸதாபனத்தை அமைக்க வேண்டும் இதற்கு அரசாங்கம் என்ன ஆலோசித்துள்ளது?

(இ) அரசாங்கத்தின் ஆலோசனை எதையும் போலிஸ படையிலுள்ள குறைந்த உத்தியோகஸதர்கள் ஆதரிக்கின்றனரா?

இதற்கு உள்நாட்டு மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு எம். எஸ. காரியப்பர் பதிலளித்ததாவது:-

(அ) போலிஸ சார்ஜண்டுகள் கான்ஸடபிள் சங்கத்தின் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்க ஆலோசிக்கப்படவில்லை.

(ஆ) திரு டேயின் அறிக்கையிற் குறிப்பிட்டபடி விட்லி சபை அமைப்பின் அடிப்படையில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி போலிஸ படையிலுள்ள எல்லா உத்தியோகஸதர்களும் தங்கள்குறைகளை எடுத்துக்கூற முடியும். கொழும்பிலுள்ள போலிஸ தலைமைக் காரியாலயத்தை மத்தியாகக் கொண்டு ஒவ்வொரு ஜில்லாவிலும் போலிஸ சங்கங்கள் அமைக்கப்படும்.

[இ] இந்த சிபார்சுகளை ஏற்கும் அறிகுறிகள் பொதுவாக காணப்படுகிறது. இத்திட்டத்தைப் பரீட்சித்துப்பார்க்க அவர்கள் விரும்புவதாகவும் தெரிகிறது.

**திரு கெனமன்:-** வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு அவர்களின் தடைசெய்யப்பட்ட சங்கங்களின் தடைகள் நீக்கப்பட்டுள்ளன. வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாதவர்களின் சங்கத்தின்மீதுள்ளதடைநீக்கப்படவில்லை. இதுதான் இம்மந்திரி இலாகாவின் கொள்கையென்று பாராளுமன்றக் காரியதரிசியின் பேச்சில் இருந்து அறிய முடிகிறது.

**சபாநாயகர்:-** இப்பிரேரணை இங்கு எழ இடமில்லை.

**திரு தஹநாயக்கா:-** சில கேள்விகள் கேட்டார்.

தற்காலிக நர்ஸ்கள் பற்றி திரு ஜி. பி. கெனமன் கேட்ட கேள்விக்கு ஸதலஸதாபனசுகாதார மந்திரி திரு பண்டாரநாயகா பதிலளிக்கையில் மூன்று வருட சேவைபுரிந்தவர்களுக்கு பரீட்சை வைத்து தெரிந்தெடுக்கப்படுவர் என்றும் அவர்களை நிரந்தர சேவைக்கு எடுக்கப்படுவது பற்றியும் கூறினர்

சீர்மைப் பழச் சத்துகளால்
தயாரிக்கப்பட்ட
பானங்கள்

12 விசேஷ
மணங்கள்

எல்லோருக்கும் உகந்தது;
இதுவே சிறந்தது.

Delicious
VITTO
FRUIT SYRUP
Delicious
Vitto
Fruit Syrup
THE VITTO PRODUCTS Co
COLOMBO

தயாரிப்பவர்கள்:—
விற்றோ புரோடெக்ஸ கம்பெனி லிமிடெட்.,
தெஹிவிலை.


உலகப்பிரசித்தி
பெற்ற
டி.எஸ்.
கம்பெனி
ஸீமார்க்
பீடிகளை
உபயோகியுங்கள்

D. S. SONS. MUKKUDAL

OUR CEYLON REPRESENTATIVE
ஆர். குசலவசேட்
91, மேட்டுத் தெரு, கொழும்பு.

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
என். எஸ. கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன்,
எம். எஸ. சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம்
ஆகியோர் திறம்பட நடிக்கும்

கன்னிகா

மகத்தான
5-வது வாரம்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர்
நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்
கினிய காட்சிகள்; உள்ளங்கவரும் உயரிய
நடிப்புகள் நிறைந்தது.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு,
மருதானை.

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு

முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

'இழந்த உறுதி'

என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்

புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சிலோன் நியூஸ்பேப்பர்ஸ லிமிட்டெட்டிறகாக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 19-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்ட்ரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.